Registered as a news paper.

பக்கங்கள்: பதினான்கு

விலை ரூபா 10.00

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20 % விசேடசலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

திருமுருகன் கொம் நெற்

48, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம்
166,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 05 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 20 (18.04.2006) செவ்வாய்க்கிழமை இதழ் 200

# வவுனியாவில் கிளைமோர்

## 4 படையினர் பலி; 8 பேர் காயம்!



சிதறிப்போன ஓட்டோ

வவுனியா —

வவுனியா - வேம்பங்குளத்தில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 4 படையினர் கொல்லப்பட்டதுடன் 8 பேர் காயமடைந்தனர்.

வவுனியா - மன்னார் வீதியிலுள்ள வேம்பங்குளத்தில் ஓட்டோ ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் கண்ணிவெடியில் 13 படையினர் பயணம் செய்த ட்ரக் நேற்றுக்காலை 8.50 மணி யளவில் சிக்கியது.

இந்தச் சம்பவத்தில் 4 படையினர் கொல்லப்பட்டனர். 7 படையினரும் பொது மகன் ஒருவரும் படுகாயமடைந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



தாக்குதலுக்குள்ளான ட்ரக்

## கவிஞர் நாவண்ணன் நாட்டுப்பற்றாளராக புலிகளால் கௌரவம்!



கிளிநொச்சி —

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்த்து மறைந்த கவிஞர் நாவண்ணனுக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் அளித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

## பொலிஸ் வாகனம் மீது வவுனியாவில் தாக்குதல்!

வவுனியா —

வவுனியா - பூந்தோட்டத்தில் நேற்றிரவு பொலிஸார் சென்ற வாகனம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் கொன்ஸ்டபிள் ஒருவர் பலியானதாகவும் மேலும் இருவர் படுகாயமடைந்ததாகவும் அங்கிருந்து கிடைத்த செய்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிரானில் கிளைமோர் 5 படையினர் காயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - கிரானில் இராணுவத்தினரின் வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 5 விமானப்படையினர் படுகாயமடைந்தனர்.

கிரான் - கோரகல்லிமடு என்ற இடத்தில் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச்

(12 ஆம் பக்கம் பார்க்க)


## ஆயுதக்குழுக்களை கட்டுப்படுத்த

# பதற்ற நிலையை தணிக்க

# பறந்து வருகிறார் பௌயர்

கொழும்பு —

அதிகரித்துவரும் பதற்ற நிலைமையைத் தணித்து அடுத்த வாரம் ஜெனிவாவில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் பேச்சுக்களில் இருதரப்பையும் பங்கேற்க வைப்பது தொடர்பாக - அர



## முழு அளவிலான போருக்குள் இலங்கைத் தீவு செல்கிறது!

காயமடைந்தனர்.

கிரான் - கோரகல்லிமடு என்ற இடத்தில் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக்குழுக்களை கட்டுப்படுத்த அரசிடம் சக்தி இல்லையாம்!

### பாலித கொகன்ன சொல்கிறார்

கொழும்பு —

கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் செயற்படும் ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்தும் சக்தி அரசாங்கத்திடம் இல்லை என அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

ஆயுதக்குழுக்களை நாட்டின் சட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

அதிகரித்துவரும் பதற்ற நிலைமையைத் தணித்து அடுத்த வாரம் ஜெனிவாவில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் பேச்சுக்களில் இருதரப்பையும் பங்கேற்க வைப்பது தொடர்பாக - அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் இன்று அவசர விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வரவுள்ளார்.



ஜோன் ஹன்சன் பௌயர்

முன்கூட்டியே திட்டமிடப்படாத வகையில் இவரது திடீர் விஜயம் இடம்பெறுவதாகவும் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வன்முறைகளால் மீண்டும் இலங்கைத்தீவு யுத்தத்துக்குள் தள்ளப்படுவதை தடுக்கும் முயற்சியாகவே இவரது விஜயம் அமைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

நோர்வே தூதரகத்தைச் சேர்ந்த பேச்சாளர் எரிக் ஹென்பேர்க் இது தொடர்பாக தகவல் வெளியிடுகையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முழு அளவிலான போருக்குள் இலங்கைத் தீவு செல்கிறது!

### ஹென்றிக்சன் அபாய அறிவிப்பு

கொழும்பு —

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகளால் நாடு முழுமையான யுத்தத்துக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகவே கருதுவதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)



உல்ப் ஹென்றிக்சன்

## புலிகளின் பயணத்துக்கு தனியார் ஹெலி வசதி!

### அரசாங்கம் இணக்கமாம்

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளின் பயணத்துக்கு தனியார் ஹெலிகொப்டரை பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்றிரவு பி.பி.சி. சிங்கள (12 ஆம் பக்கம் பார்க்க)



றோகித போகல்லாகம

## கிளைமோர் குண்டு வெடித்து பொதுமக்கள் இருவர் பலி!



திலீபன்

சாவகச்சேரி —

சாவகச்சேரி - தபாற்கந்தோர் வீதியில் நேற்றுக்காலை 8.45 மணியளவில் கிளைமோர் குண்டொன்றை இராணுவத்தினர் வெடிக்கவைத்ததில் பொதுமக்கள் இருவர் பலியானதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



சுரேஸ்குமார்

## வர்த்தக நிலைய உரிமையாளர் மீசாலையில் சுட்டுக்கொலை!

மீசாலை —

மீசாலை - புத்தூர் சந்தியில் நேற்று வர்த்தகரான இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது - (12 ஆம் பக்கம் பார்க்க)



சகீலன்

# தீ வண்ணம் உரைத்த நாவண்ணம்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 - 03 - 1948 | 15 - 04 - 2006 |

## நாட்டுப்பற்றாளர் கவிஞர் நாவண்ணன்

## (மருசலீன் - சூசைநாயகம்)

காலத்துயர் வரைந்த
கவிதையின் விரலே!
கடற்புலிகள் திறனுரைத்த
மூத்த தமிழ்ப் புயலே!
கடல் மடியில் கரைந்த புலி
மறவர்களின் கனவை
காவியமாய்ப் பாடிவைத்த
செந்தமிழ் புலவா!
ஓயாத அலைகளைப் போல்
நீ எழுதிப் போனாய்!
ஓய்ந்துவிடும் வேளையிலும்
உறங்குவதை மறந்தாய்!

இனிமைத் தமிழ் படித்து
தமிழன் சிந்திய
உதிரத்தின் கதை படித்து
கடற்புலி நாம்
கேட்கின்ற வேளையெல்லாம்
கலை படித்து
தமிழன் விழி நெருப்பை
தலைவனவன் கனவுகளை
இசைபடவே பாவுரைத்து
இமையிரண்டும் மூடிய பின்
இமயமாகி நின்றாய்!
இரு கரமும் கூப்புகின்றோம்
இதயத்தில் நீயிருப்பாய்.


விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்

SEA TIGERS
OF LIBERATION TIGERS

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்

(4471)

# அரசை மிரட்டினால் பொதுத்தேர்தல்; மகிந்தவின் முடிவால் ஜே.வி.பி அதிர்ச்சி



கொழும்பு

அரசுக்கு அழுத்தம் கொடுத்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்திருப்பதான தகவல் கிடைத்ததையடுத்து - அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுப்பதைத் தவிர்க்க ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

சமாதானச் செயற்பாடுகளிலிருந்து நோர்வேயை வெளியேற்றுவதற்கான ஆர்ப்பாட்டங்கள், யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்வதற்கான ஆர்ப்பாட்டங்களை ஜே.வி.பி நடத்தவுள்ளது.

கட்சியைத் தொடர்ந்து நிலைக்கச் செய்வதற்காக மக்கள் முன்னிலையில் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நடத்தினாலும், அதனால் அரசாங்கத்தின் நிலைத்தன்மைக்குப் பாதிப்பினை ஏற்படுத்தத் தேவையில்லை என்று ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

மக்களுடன் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தினாலும், நோர்வேயை வெளியேற்றல் மற்றும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் திருத்தல் ஆகியன பற்றி எதுவித இறுதி அறிவிப்போ எழுத்து மூலமான அறிவிப்போ அரசாங்கத்திடம் முன்வைப்பதில்லையென ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுத்தால், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலுக்குச் செல்லுமாறு மகிந்தவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்குத் தெரியவந்துள்ளது. அவர் அதனைக் கட்சிக்குத் தெரியப்படுத்தியதையடுத்தே ஜே.வி.பி. இந்த முடிவுக்கு வந்துள்ளது.

இதையடுத்து நோர்வேக்கு எதிராக ஜே.வி.பி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டாலும் அரசாங்கத்துக்கு எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## படையினரின் கெடுபிடிகள் காரணமாக
# திருக்கோணேஸ்வரர் உற்சவத்தை இடைநிறுத்த வேண்டிய அபாயம்!

திருகோணமலை

படையினரின் கெடுபிடிகள் காரணமாக வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை இடைநிறுத்த வேண்டிய அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 11 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் மீது - அந்தப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் பாரிய நெருக்கடிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒருமுறை ஆலயத்துக்குச் செல்லும் மக்கள் மறுமுறை செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆலயத்தின் பூசகர்கள் கடும் சோதனைக் கெடுபிடிகளுக்கு உள்ளாகி வருவதாகவும் ஆலயத்தின் குருக்கள் சிவகுருராஜக் குருக்கள் தெரிவித்தார்.

படையினரின் தொடர் சோதனை நடவடிக்கை குறித்துப் பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரிவித்தும், படையினர் தொடர்ந்து சோதனைக்கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் லட்சக்கணக்கான மக்கள் பங்குபற்றும் ஆலயத் திருவிழாவில் சராசரி பத்துப் பேரே பங்கேற்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், படைக் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையால் - தொடர்ந்து ஆலயத் திருவிழாக்களை முன்னெடுக்க முடியாமல் போகக்கூடிய அபாயச் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதுகாப்பு உத்தரவாதம் கோரும் திருகோணமலை வங்கியாளர்கள்!

திருகோணமலை

வங்கிகளுக்கும் வங்கியாளர்களுக்கும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கும் வரை பணிகளுக்குச் செல்லப் போவதில்லை என திருகோணமலை வங்கியாளர் சங்கம் அறிவித்துள்ளது.

அண்மையில் திருமலையில் வங்கியாளர் ஒருவர் அலுவலக வளாகத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டமை, அதன்பின்னர் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களின்போது வங்கியொன்றின் தன்னியக்க அட்டை மையம் தாக்கப்பட்டதுடன், வங்கியாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் எரியூட்டப்பட - வங்கியாளர் ஒருவரை வங்கியில் வைத்து தாக்க முயற்சித்தமை போன்ற சம்பவங்களால் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய வங்கியாளர்கள் - தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர். (10)

# பறிக்கப்பட்ட பதவிகள் மீண்டும் மகிந்த விஜேசேகரவிடம்

கொழும்பு

மகிந்த விஜேசேகரவிடமிருந்து பறிக்கப்பட்ட பதவிகளை மீண்டும் வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

மாத்தறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் பதவியையும், செயற்குழு உறுப்பினர் பதவியையும் இவரிடமிருந்து ஐ.தே.க தலைவர் ரணில் பறித்திருந்தார்.

கட்சித் தலைமையை விமர்சித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2 ஆம் திகதி முதல் இரு பதவிகளிலிருந்தும் மகிந்த விஜேசேகரவை நீக்குவதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருந்தார்.



மகிந்த விஜேசேகர மீதான ரணிலின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு அதிகமாகியமையடுத்து- இந்தப் பொறுப்புக்களை மீண்டும் வழங்க ரணில் முடிவு செய்திருப்பதாக அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

ரணிலின் நடவடிக்கைக்குப் பின்னரான ஒழுங்கு விசாரணைகளின் முடிவின்படி விஜேசேகர மீதான நடவடிக்கையை இரத்துச் செய்ய ரணில் விக்கிரமசிங்க இணங்கியுள்ளார்.

கட்சியில் பிளவுபட்டிருக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து நியமிக்கப்பட்டுள்ள அரசியல் சபையினூடாகக் கட்சியினுள் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த உள்ளோம் என்றும், கட்சித் தலைமை தொடர்பாக எந்தவொரு பிரச்சினையும் இல்லை எனத் தீர்மானங்கள் எடுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாகவே பிரச்சினைகள் நிலவியது என்றும் எஸ்.பி.திஸநாயக்க கூறினார்.

புதிய அரசியல் சபையினூடாக இதுவரை இருந்த பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும்- கட்சினுள் திடீர் முடிவுகளை எடுக்கவும் அவற்றைச் செயற்படுத்தவும் அந்த சபையால் முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஈழத்தமிழரின் பாதுகாப்பான வாழ்வை இலங்கை அரசு ஏற்படுத்த வேண்டும்
## தமிழக முதல்வர் ஜெயலலிதா



கொழும்பு

ஈழத் தமிழர்கள் மதிப்போடும், மரியாதையோடும், பாதுகாப்போடும் வாழும் சூழ்நிலையை இலங்கை அரசு ஏற்படுத்தவேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழக ஊடகவியலாளர்களுக்கு அளித்த நேர்காணலில் ஜெயலலிதா கூறியுள்ளதாவது-

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக என் நிலைப்பாட்டில் எந்தவொரு முரண்பாடும் இல்லை.

ஈழம் என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள். ஈழம் என்பது ஒரு எண்ணக்கரு. ஒரு லட்சியம். ஒரு கனவு, ஒரு குறிக்கோள், ஒரு லட்சியத்தை அடைய வேண்டும் என்று கனவு காண்கிறார்கள். அவர்களைத்தான் நீங்கள் ஈழத்தமிழர்கள் என்று குறிப்பிடுகிறீர்கள்.

அதையே நான் இலங்கை தமிழர்கள் என்று சொல்கிறேன். என்னுடைய கொள்கையில் ஆரம்பித்ததிலுருந்து இன்று வரை எந்த மாறுபாடும் இல்லை.

இலங்கைத் தமிழர்கள் மதிப்போடும், மரியாதையோடும் பாதுகாப்போடும் அங்கே வாழ்க்கையை நடத்த வேண்டும். அதற்கான ஒரு உகந்த சூழ்நிலையை இலங்கை அரசு ஏற்படுத்தவேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். இதில் இரண்டாம் கருத்துக்கே இடமில்லை. இதுதான் என்னுடைய கொள்கை என்றார் ஜெயலலிதா.

# வேட்புமனு நிராகரிப்பு; உயர் நீதிமன்றில் ஐ.தே.க!

கொழும்பு

கொழும்பு மாநகர சபைக்குத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து மேன்முறையீடு செய்ய அனுமதியளிக்குமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் என்.வி.கே.கே.வேரகொட உயர் நீதிமன்றில் விசேட மனுதாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, தெரிவத்தாட்சி அலுவலர் மகிந்த தேசப்பிரிய ஆகியோர் உட்பட 20 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர சபை உட்பட 22 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மே மாதம் 20 ஆம் திகதி நடத்துவதற்குத் தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

தங்களின் வேட்புமனுவை ஏற்காது கொழும்பு மாநகர சபைக்கான தேர்தல் நடத்தப்படுவதைத் தவிர்க்கும் வகையில், உத்தரவு பிறப்பிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ளது.

# வீடு செல்லும் படையினருக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடாம்!

கொழும்பு

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் படையினர் விடுமுறையில் வீடு செல்லும்போது - அவர்கள் பயணிக்கும் வாகனங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குவதற்குப் பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுமுறையில் செல்லும் படையினரை ஏற்றிச்செல்லும் பஸ்களை இலக்குவைத்து மீண்டும் தாக்குதல்கள் நடத்தப்படுவதால், இந்த விசேட நடவடிக்கைகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

படையினர் பயணிக்கும் முக்கிய பாதைகளான திருமலை - கொழும்பு, வவுனியா - கொழும்பு, மன்னார் - வவுனியா மற்றும் கொழும்பு - மட்டக்களப்பு ஆகிய பிரதான வீதிகளில் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த வீதிகளில் தாக்குதல்களை நடத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாகப் பாதுகாப்புத் தரப்பு கண்டறிந்துள்ளதென்றும் அந்த வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

# இலங்கையில் நிகழும் வன்முறைகளை ஐ.நா. விசாரணை செய்ய வேண்டுமாம்!
## ஆசிய மனித உரிமையகம் கோரிக்கை

கொழும்பு

இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்று வரும் வன்முறைகள் குறித்து ஐ.நா.சபையின் மனித உரிமைகள் ஆணையகம் விசாரணை நடத்த வேண்டுமென ஆசிய மனித உரிமைகள் மையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஹொங்ஹொங்கை தலைமையமாகக் கொண்டு செயற்படும் ஆசிய மனித உரிமை மையத்தின் தலைவர் பாசில் பெர்னாண்டோ கூறியுள்ளதாவது -

இலங்கை நிலைமைகள் தொடர்பாக நாம் அவதானமாக கண்காணித்து வருகிறோம். மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. படுகொலைகளும், அப்பாவி மக்கள் இடம்பெயர்வும் தொடர்கின்றன. இது மிகவும் மோசமானதாகும்.

இத்தகைய வன்முறைகளுக்கு யார் காரணம் என்பதை மனித உரிமைகள் ஆணையம் போன்ற சுயாதீனமான குழுக்களே விசாரணை நடத்தமுடியும். இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவோ முடக்கிக் கிடக்கிறது.

மக்கள் மீதான தாக்குதல்களை பழிவாங்கும் நடவடிக்கையாக அரச படையினர் மேற்கொள்வதாகக் கேள்விப்படுகிறோம். இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவைத் தவிர்த்த ஒரு சுயாதீனக் குழு இத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குக் குறிப்பிட்ட எல்லைகளே உண்டு.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவை அழைத்து இலங்கை நிலைமைகளை கண்காணிக்க வேண்டும். நேபாளத்தில் அரச படைகளுக்கும், மாவோயிசப் போராளிகளுக்கும் இடையே பொது மக்கள் சிக்கிய நிலையில் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இப்படியான மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை நடத்தும் போது வன்முறைகள் குறைந்து, சேதங்களும் கட்டுப்படுத்தப்படும். போர்க் குற்றங்களும், இனப்படுகொலைகளும் மனித உரிமைகள் குழுவின் வரையறைகளுக்குட்பட்டவை.

வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல, இலங்கையின் இதர பகுதிகளிலும் பொது மக்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் ரெலோ உறுப்பினர் மீது மட்டக்களப்பில் துப்பாக்கிச்சூடு!

மட்டக்களப்பு


மட்டக்களப்பு - கோட்டைமுனையில் ரெலோ அமைப்பின் முன்னாள் உறுப்பினர் மீது இனந்தெரியாதோர் இருவர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் - இதன்போது அவர் காயமின்றித் தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓட்டோவில் சென்று கொண்டிருந்த அரியநாயகம் தர்மசிங்கம் என்ற முன்னாள் ரெலோ உறுப்பினர் மீதே மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத் தாக்குதலை நேற்றுமுன்தினம் காலை 10.20 மணியளவில் நடத்தினர்.

இதில் அரியநாயகம் தர்மசிங்கம் காயங்கள் ஏதுமின்றி உயிர்தப்பினார். மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






கிளிநொச்சியில் நேற்று நாட்டுப்பற்றாளர் கவிஞர் நாவண்ணனின் பூதவுடல் எடுத்துவரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளதையும், அவருக்கு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.



வவுனியாவில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஓட்டோ சிதைந்து போயிருப்பதை படையினர் பார்வையிடுகின்றனர்.



சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டுள்ள படையினர்



சம்பவத்தில் காயமுற்ற படையினர் சிலர்.

## விளையாட்டு

# முதல் இனிங்ஸின் முடிவில் நியூஸிலாந்து முன்னிலை

செஞ்சூரியன் —

தென்னாபிரிக்க - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே செஞ்சூரியனில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி தனது முதலாவது இனிங்ஸில் 327 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது.





முதல்நாள் ஆட்டநேரமுடிவில் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

போஜே 20, ஸ்ரெய்ன் 8 ஓட்டங்களுடன் இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இதில் போஜே மேலதிகமாக 3 ஓட்டங்களைப் பெற்று 4 பவுண்டரிகள் அடங்கலாக 23 ஓட்டங்களுடன் - பிராங்ளின் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இறுதியாக என்ரினி களமிறங்க, 13 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஸ்ரெய்ன் - மார்ட்டின் வீசிய பந்தை மில்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனால் தென்னாபிரிக்க அணி 276 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. என்ரினி 1 ஓட்டத்தைப் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் மில்ஸ், பிராங்ளின் இருவரும் தலா 4, மார்ட்டின் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அந்த அணியின் மார்ஷலும், புல்ரனும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இதில் ஸ்கோர் 8ஐத் தொட்டபோது - 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த மார்ஷல் - என்ரினியின் பந்தில் போல்டானார்.

அடுத்து களமிறங்கிய பிளெமிங் ஓட்டமெதையும் பெறாமல் என்ரினி வீசிய பந்தை அவரிடமே பிடிகொடுத்தும், ஸ்ரைரிஸ் 17 ஓட்டங்களைப் பெற்று என்ரினி வீசிய பந்தை கிப்ஸிடம் பிடிகொடுத்தும் ஆட்டமிழந்தனர்.

அவர்களையடுத்து அஸ்ரில் களமிறங்க, 14 ஓட்டங்களைப் பெற்றிருந்த புல்ரன் - பொலக் வீசிய பந்தை பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் ஜேக்கப் ஓரம் களமிறங்க, 4 ஓட்டங்களைப் பெற்றிருந்த அஸ்ரில் - ஸ்ரெய்ன் வீசிய பந்தை பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

45 ஓட்டங்களைப் பெறுவதற்குள் 5 முக்கிய விக்கெட்டுக்களை இழந்து தவித்தது நியூஸிலாந்து அணி. அந்த வேளை, ஓரத்துடன் மக்கலம் இணைந்தார். அவர் 6 பவுண்டரிகள் அடங்கலாக 31 ஓட்டங்களைப் பெற்று கலிஸ் வீசிய பந்தை போஜேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய விற்றோரி, ஓரத்துடன் இணைந்து நியூஸிலாந்து அணியைத் தூக்கி நிறுத்தினார். இந்த இருவரும் அதிரடியாகவும், நிதானமாகவும் ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

இவர்கள் ஏழாவது விக்கெட்டுக்காக 183 ஓட்டங்களைப் பகிர்ந்த வேளை, 11 பவுண்டரிகள் அடங்கலாக 81 ஓட்டங்களைப் பெற்றிருந்த விற்றோரி - என்ரினி வீசிய பந்தை பிறின்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பிராங்ளின் 8 ஓட்டங்களைப் பெற்று என்ரினியின் பந்திலும், மில்ஸ் 12 ஓட்டங்களைப் பெற்று பொலக்கின் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

இறுதியாக மார்ட்டின் களமிறங்க, சிறப்பாக ஆடி அணியை வலுப்படுத்திய ஓரம் - 18 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 133 ஓட்டங்களைப் பெற்று - ஸ்ரெய்ன் வீசிய பந்தை பொலக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனால் நியூஸிலாந்து அணி 327 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மார்ட்டின் 1 ஓட்டத்தைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார்.


பந்துவீச்சில் என்ரினி 5, ஸ்ரெய்ன், பொலக் இருவரும் தலா 2, கலிஸ் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அடுத்து தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இனிங்ஸை ஆடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக சிமித்தும், கிப்ஸும் களமிறங்கினர்.

இரண்டாம் நாள் ஆட்டநேரமுடிவில் அந்த அணி விக்கெட் இழப்பின்றி 5 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

### காயம் குணமாகாததால்

# இங்கிலாந்து டெஸ்டில் அத்தபத்து நீக்கம்



கொழும்பு —

இலங்கை அணியின் கப்டன் அத்தபத்து காயம் காரணமாக அடுத்தமாதம் இங்கிலாந்து அணியுடன் நடைபெறவுள்ள 3 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் இடம்பெறவில்லை.

முதுகுவலியால் பாதிக்கப்பட்ட அவர், பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரிலும் ஆடவில்லை.

அவருக்கு ஏற்பட்ட காயத்திலிருந்து அவரின் உடல்நிலை சிறிதும் முன்னேற்றமடையாத நிலையில் - சத்திரசிகிச்சை செய்வது பற்றி ஆலோசிப்பதாக இலங்கை அணியின் உடற்கூற்றியல் நிபுணர் ரொமி சிம்ஷெக் தெரிவித்தார்.

இந்தநிலையில் இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடருக்கு கப்டனாக மஹெல ஜெயவர்த்தனவும், துணைக் கப்டனாக சங்ககாரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# பலத்த மழை காரணமாக நேற்றைய ஆட்டம் பாதிப்பு

சிட்டகொங் —



அவுஸ்ரேலிய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே சிட்டகொங்கில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் அவுஸ்ரேலிய அணி 1 விக்கெட்டை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் ஜக்கஸ் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 38, ஜிலெஸ்பி 5 ஓட்டங்களுடன் நேற்றைய தினம் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்த ஆட்டத்தில் சில ஓவர்கள் மட்டுமே பந்துவீசப்பட்ட நிலையில் அவுஸ்ரேலிய அணி நேற்றைய ஆட்டத்தில் 75 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

ஜக்கஸ் - ஜிலெஸ்பி ஜோடி நிதானமாக ஆடியது. ஸ்கோர் 120 ஐத் தொட்டபோது 8 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 66 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜக்கஸ் - மொகமட் ரபீக் வீசிய பந்தை நபீஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


அடுத்து பொண்டிங் களமிறங்கினார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் அவுஸ்ரேலிய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் ஜிலெஸ்பி 6 பவுண்டரிகள் அடங்கலாக 28, பொண்டிங் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.

# எங்களின் கைவண்ணம்



சி.அலேக்கியா
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
தரம் - 07




தி.சுகிர்தன்
யா/அனலைதீவு தெற்கு அ/த/க
வித்தியாலயம் தரம்- 05



சு.வரோதயன்
யா/சந்திரமௌலீசா வித்தியாலயம்
தரம் - 8



த.லக்ஷிகா
யா/இந்து ஆரம்பப் பாடசாலை
தரம் - 3D




ச.கலையரசி
யா/ இந்து ஆரம்ப பாடசாலை
தரம் - 3 A



க.சுபஷித்
தி/இ/கி/ஸ்ரீ/ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருகோணமலை. தரம் - 3 C



கந்தசாமி ஆதித்தன்
யாழ்.புற்றளை மகாவித்தியாலயம்
தரம் -07

முடிந்து போன நாட்களைப் பற்றி வருந்தாதீர்கள்.
எதிர்காலத்தை நினைத்து அஞ்சாதீர்கள். இன்று செய்யும்காரியத்தில்
முனைப்பாயிருங்கள்.

*ஔரேலியன் மார்க்கஸ்*



# துருவன்




## சந்துரு மாமா

வண்ண வண்ணப் பூக்களின் அழகை
வந்துமே பாருங்கள்;
கண்டி மாநகரம் கண்களைக் கொஞ்சிடும்
கதைகளைக் கேளுங்கள்.

மலைகளின் மீது வரிசையாய் நின்றிடும்
மரங்களும் கவி பாடும்.
அலைகளைப் போல மலைகள் இருந்து
அற்புதக் காட்சி தரும்.

சலசலத் தோடும் மகாவலி கங்கையின்
சத்தமும் இசைபாடும்;
கல கலவெனவே கைதட்டி ரசிக்கையில்
கண்களில் நீர் கசியும்

குறிஞ்சிக் குமரனைக் கும்பிடச் செல்கையில்
குந்திட ஆசை வரும்;
கோயிலின் அழகுடன் குனிந்துமே பார்க்கையில்
திரும்பிட மனம் வெறுக்கும்

பட்டாம் பூச்சிகள் சிறகினை விரித்து
பறப்பதைப் பாருங்கள்;
கூட்டாஞ் சோறு ஆக்கி மகிழ்ந்திடக்
கூடியே வாருங்கள்.

கண்கள் விரிய அன்பு சொரிய
அனைவரும் வாருங்கள்
அடுத்த வாரம் பள்ளி தொடங்கிடும்
அதற்கு முன் சென்றிடுவோம்.

# சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

## பாகம் -1

(சென்றவாரத் தொடர்ச்சி...)

உறுப்புரை - 6

*6.1:* ஒவ்வொரு பிள்ளைக்கும் உயிர்வாழும் உரிமை இயற்கையாகவே கிடைத்தது என்பதை அரச தரப்பினர் ஏற்றுக் கொள்கின்றனர்.

*6.2:* அரச தரப்பினர் பிள்ளையின் உய்வையும் விருத்தியையும் தம்மால் முடிந்தவரை உறுதிப் படுத்தல் வேண்டும்.

ஆரோக்கியமுள்ள சிறுவர்களாக நீங்கள் வளர்வதே துருவனின் விருப்பம்

# குறுக்கெழுத்துப் போட்டி

அன்பான மாணவர்களே!

துருவன் உங்களுக்காக அறிமுகப்படுத்தும் போட்டி இது. இதில் பாடசாலை மாணவர்கள் அனைவரும் வகுப்புக் கட்டுப்பாடின்றிக் கலந்து கொள்ளலாம். கலந்து கொண்டு வெற்றிபெறும் முதல் மூன்று திறமைசாலிகளுக்கும் முறையே 500ரூபா 300ரூபா 200 ரூபா பரிசு வழங்கப்படும். உங்கள் விடைகளை எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்பாக உங்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைப்பது பயனுடையதாக இருக்கும்.

உங்கள் விடைகள் யாவும் 6ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புவது அவசியமானதாகும். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

"துருவன் பொது அறிவுப் போட்டி"
நமது ஈழநாடு,
267 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளது விபரம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நமது ஈழநாட்டில் வெளிவரும்.

# குறுக்கெழுத்துப் போட்டி -7

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வெ | | 2 நி | 3 | ■ | 4 பா | ■ | 5 |
| | ■ | | 6 து | 7 | | | ர் |
| 8 | பு | | ■ | சு | | ■ | |
| | ■ | | ■ | 9 | | 10 வு | ■ |
| | ■ | ■ | | ■ | ■ | | 11 த |
| ■ | 12 | | ள் | | ■ | | |
| 13 | வை | ■ | | ■ | ■ | ■ | |
| 14 | | ■ | 15 வெ | | | | |

**இடமிருந்து வலம்:**

1. சந்திரனை கவிஞர்கள் இப்படியும் கூறுவர்.
6. கள்ளுண்ணாமை என்ற அதிகாரத்தின் கீழ் நஞ்சுண்பார் கள்ளுண்பவர் என்று முடியும் குறளை வள்ளுவர் ஆரம்பிக்கும் சொல்.
8. நல்லூர் திருவிழாக் காலத்தில் பலர் இதனை எடுத்தும் தமது நேர்த்திக் கடனைச் செலுத்துவர். குழம்பியுள்ளது.
9. எல்லார்க்கும் நன்றாம் இது என்று வள்ளுவர் கூறுகிறார்.
12. கவிஞர்கள் பெண்களின் விரல்களுக்கு இந்த மலரினை ஒப்பிட்டுக் கூறுவதும் உண்டு. குழம்பி வந்துள்ளது.
13. சிறு குழந்தைகள் சுமந்து திரிய விரும்புவது. பெரியவர்களில் பலர் இன்று தமது வீடுகளில் இவற்றை அழகு படுத்தி வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.
14. தினமும் மனம் விட்டு ......த்தால் நோய் விட்டுப் போகுமாம் எனச் சிலர் கூறுவர். இங்கு இடை வெளியை நிரப்பிப் பாருங்கள். மாறி யுள்ளது.
15. இருளில் இருப்பவர்களுக்கு இதனது உதவி அவசியமாகின்றது.

**மேலிருந்து கீழ்.**

1. ஒரு காலத்தில் குடாநாட்டு விவசாயிகளது பணப்பயிர்களுள் ஒன்றாக இது இருந்தது.
2. குடாநாட்டிலுள்ள சுற்றுலா மையங்களுள் ஒன்று இது. கீரிமலையுடன் இதனை இணைத்துக் கூறும் கதைகளும் உண்டு.
3. எமது முன்னோர்களது விவசாயத்துக்கு துணைபுரிந்த இது அன்றைய பண்பாட்டின் குறியீடாகக் கூட இருந்தது. இன்று தொழில் நுட்ப முன்னேற்றத்தால் அடித்துச் செல்லப்பட்டவற்றுள் இதுவும் ஒன்று. தலை கீழாக உள்ளது.

4. குறவர்களது விருப்பமைப் பொருட்களில் இதுவும் ஒன்று.
5. இது பழந்த முகத்தோடு எங்களுடன் மனிதம் உலாவுகிறது. இங்கு குழம்பியுள்ளது.

## குறுக்கெழுத்துப் போட்டி 5 விடைகள்

## பொது அறிவுப் போட்டி 5 விடைகள்

1. ஐந்து
2. 2.35 k.g
3. 109 g
4. யாழ் டுப்பிட்டி மகளிர் கல்லூரி
5. கண்ரு நடையாக என்பவர் கற்றோர்.
6. ரிகி ரின் மெக்கான்
7. ஸ்ரீத பாலிங்க் / பாலிங்க பண்டார / முரளிதரன்
8. ரிக்கி பொண்டிங்
9. உசைய்ந்தாடப்
10. ஏற்றத்தை அறுபது டட்டம்.

# மரபுச் சொற்கள்

1. ஆடு மேய்ப்பவன் - இடையன்
2. யானை தேர் செலுத்துபவன் - பாகன்
3. தென்னையின் இளங்காய் - குரும்பை
4. மா பனை புளியின் இளங்காய் - பிஞ்சு
5. யானையின் மலம் - இலத்தி
6. மாட்டின் மலம் - சாணம்
7. எருமையின் மலம் - விட்டை
8. காகம், குருவியின், மலம் - எச்சம்
9. மிளகாய், கத்தரி, விதை - விதை
10. நெல், கோதுமை, உள்ளீடு - பதர்
11. மா, பலா, வித்து - கொட்டை
12. நெல், கோதுமை, உள்ளீடு - அரிசி
13. அவரை உழுந்து உள்ளீடு - பருப்பு
14. பனம்பழம் உள்ளீடு - சளை
15. மாம்பழம் உள்ளீடு - சதை

ச. சிவாநயன்
தரம் - 5
யா/சந்திரமௌலீச வித்தியாலயம்



இந்த வார படைப்பாளி போட்டி
இல: 01

# சிறுகதை எழுதுவோம்

## இந்த வார ஆரம்பம்

# இந்தவாரப் படைப்பாளி போட்டி

துருவன்
நமது ஈழநாடு,
267 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

# பொது அறிவுப் போட்டி

"துருவன் பொது அறிவுப் போட்டி"
நமது ஈழநாடு,
267 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# உலக அதிசயங்கள்

1) தாஜ்மகால் - இந்தியா
2) மாபெரும் சுவர் - சீனா
3) பிரமிட் - எகிப்து
4) சுதந்திரசிலை - அமெரிக்கா
5) சாய்ந்த கோபுரம் - இத்தாலி
6) தொங்குதோட்டம் - பபிலோனியா
7) நயாகரா நீர் வீழ்ச்சி - வட அமெரிக்கா

க. வரோதயன்
தரம் 8
யா/சந்திர மௌலீச வித்தியாலயம்.

## பொது அறிவுப் போட்டி இலக்கம் -07

1. யானையின் துதிக்கையில் எத்தனை எலும்புகள் உள்ளன?
2. புகையிரத சேவை நடைபெறாத நாடு எது?
3. தோமஸ் அல்வா எடிசனது கண்டுபிடிப்புக்கள் எத்தனை?
4. இளஞ் சிவப்பு நிறமான பாலைத் தரும் உயிரினம் எது?
5. மின்னலினால் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மை என்ன?
6. உயிர்கள் மீது அன்பு கொண்டால்... என்ற சித்திரக் கதையில் வந்த குட்டிக் குரங்கின் பெயர் என்ன?
7. இலங்கை கிரிக்கெட் அணியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ள வீரர் யார்?
8. அண்மையில் நடைபெற்று முடிந்த கொமன் வெல்த் போட்டி களில் பளுதூக்கும் கோட்டியில் 62 கிலோ எடைப் பிரிவில் தங்கம் வென்ற வீரர் யார்?
9. இந்திய கிரிக்கட் அணித் தலைவர் யார்?
10. கடந்த வார விளையாட்டரங்கத்தில் அவசரம் சத்திர சிகிச்சை என்ற தலைப்புடனான குறிப்பை வரைந்தவரது பெயர் என்ன?

## பொது அறிவுப் போட்டி / குறுக்கெழுத்துப் போட்டி விண்ணப்பப் படிவம்

(பொருத்தமற்றதை வெட்டிவிடுக)

அலுவலக உபயோகம்

இல: 07

முழுப்பெயர் : ……………………………

பாடசாலை : ……………………………

கற்கும் தரம் : ……………………………

………… திகதி

………………… மாணவர் கையொப்பம்

அதிபர்/ ஆசிரியர் சான்று :

இந்த மாணவர் எமது பாடசாலையில் தரம் ………… கற்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின் றேன்.

…………………

ஒப்பம் (பதவி முத்திரை)

# தகவல் பெட்டகம்



✱ நான்கு பக்கமும் நிலப்பரப்பால் சூழப்பட்ட சாட் நாட்டில் ஒரு மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த மண்டை ஓட்டின் வயது 70 லட்சம் ஆண்டுகள் என பிரான்ஸ் விஞ்ஞானிகள் குழு கண்டு பிடித்துள்ளது. முதலில் கொரில்லா, வாலில்லாக் குரங்கு, ஆகிய வற்றின் மண்டை ஓடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தே 70 லட்சம் ஆண்டு களுக்கு முந்திய மனிதனின் மண்டை ஓடு என முடிவுசெய்தனர். இந்த மண்டை ஓட்டிற்கு''டாமை'' என பெயரிடப்பட்டுள்ளது. 70 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனித இனம் வாழ்ந்து வருவது புதிய தகவலாகும்.

✱ குறிஞ்சி மலரைப் போன்று பதினைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் மலரொன்று பிலிப்பைன்ஸ் நாட்டில் காணப்படுகின்றது. வயலட் நிறமான அந்த மலரின் பெயர் - லிம்பா

✱ சுவிட்சர்லாந்துக்கு தனித்தேசிய மொழிகிடையாது. பிரெஞ்ச் மொழிக்கு சொந்தமாக எழுத்துக்கள் கிடையாது. ஜப்பான் மொழியில் ஒய்வு என்ற வார்த்தையே கிடையாது.

✱ நீருக்கடியில் எவ்வளவு ஆழத்தில் எந்த இடத்தில் நிறைய மீன்கள் உள்ளன என்பதை அறிய உதவும் கருவியின் பெயர் அக்கோ மீட்டர் என்பதாகும்.

## இலங்கையில் மிக நீளமான நதிகளும் அவற்றின் நீளங்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. மகாவலி கங்கை | 335 (கி.மீ) | 9. மகா ஓயா | 134 |
| 2. அருவி ஆறு | 164 | 10. களுகங்கை | 129 |
| 3. கலா ஓயா | 148 | 11. கிரிந்தி ஓயா | 117 |
| 4. களனி கங்கை | 145 | 12. கும்புக்கன் ஓயா | 116 |
| 5. யான் ஓயா | 142 | 13. மாணிக்க கங்கை | 114 |
| 6. தெதுறு ஓயா | 142 | 14. ஜின் கங்கை | 113 |
| 7. வளவ கங்கை | 138 | 15. மீ ஓயா | 109 |
| 8. மாதுரு ஓயா | 135 | 16. கல் ஓயா | 108 (கி.மீ) |

## ஓ... உண்மையாகவா...?

### ஆம்... ஆம்.. உண்மையாகவே...



➽ சீனமொழியிலான தட்டெழுத்து இயந் திரத்தில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன தெரியுமா?
5850 எழுத்துக்கள்

➽ கோள்களுள் மிகவும் குளிரானதும், மிகவும் சிறியதுமான கோள் எது தெரியுமா?
புளூட்டோ கோள்தான். இதனது வெப்ப நிலை மைனஸ் 360 பரன்ஹீட் ஆகும்.

➽ பாடல்கள் இல்லாத தேசிய கீதங்களுள் மிகவும் பழமையான தேசிய கீதம் எந்த நாட்டுக்குரியது?
ஸ்பெயின். இந்த நாட்டுத் தேசிய கீதம் வெறும் இசையை மட்டுமே கொண்டுள்ளது.

➽ ரோட்டரிச் சங்கம் யாரால் எப்பொழுது உருவாக்கப்பட்டது?
அமெரிக்காவைச் சேர்ந்த போல் பி.ஹரிஸ் என்பவரால்.

➽ உலகிலேயே மிகச் சிறிய கடற்கரையைக் கொண்ட நாடு எது?
மொனாகோ - 3.49 மைல்கள் நீளமான கடற்கரை மட்டுமே உண்டு.

➽ உலகிலேயே மிகச் சிறிய குடியரசு நாடு எது?
நௌரு - இந்த நாட்டின் பரப்பளவு வெறும் ë.2 சதுர மைல்கள் தான்.

➽ தேனையும் நெய்யையும் சம அளவில் கலந்தால் நஞ்சாகி விடுமாம் உண்மைதானா? உண்மைதானாம்.

➽ குளிர்களி (ஐஸ்கிறீம்) எப்பொழுது யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜெரால்ட் டி செயின் என்பவரால் 1620 இல் கண்டு பிடிக்கப்பட்டது.

➽ வாகனங்களில் இருந்து புகையாக வெளியாகும் வாயுவின் பெயர் என்ன?
கார்பன் மொனாக்ஸைட்

➽ நாய்கள் நமக்குத் தோழனடி பாப்பா என்று அன்றே பாடிய கவிஞர் யார்?
பாரதியார்

➽ பட்டுத் தயாரிப்பு முறையை யேசு பிறப்பதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே கண்டுபிடித்த நாடு எது?
சீனா

➽ குளோரினைத் திரவமாக்கிய முதலாவது விஞ்ஞானி யார்?
மைக்கல் ஃபாரடே

➽ நம்பிக்கைத் துரோகத்துக்கு அடையாளமாக யாருடைய கொலை வரலாற்றில் கூறப்படுகிறது?
ஜூலியஸ் சீசர் - இவர் நண்பன் புரூட்டஸ்ஸினால் கொலை செய்யப்பட்டார்.


➽ தனது நாட்டில் 270 கோடி சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் வனவளத்தைப் பேணி வரும் நாடு எது?
ரஷ்யா

➽ உயிருள்ள ஜந்துக்கள் அனைத்தையும் அன்பினால் அணைத்துக் கொள்ளுங்கள் என்று கூறிய இந்திய ஞானி யார்?
கௌதம புத்தர்

➽ நோபல் பரிசு பெற்ற முதல் தமிழர் யார் தெரியுமா?
சேர்.சி.வி இராமன் (இந்தியா)

➽ விலங்குகளுள் பெரிய இதயம் உள்ள விலங்கு எது தெரியுமா?
ஒட்டகச் சிவிங்கி

➽ முதலாவது உலகத் தமிழ் மா நாடு எங்கு நடைபெற்றது?
மலேசியா நாட்டின் கோலாலம் பூரில் 1966இல் நடைபெற்றது.



# மூன்று நண்பர்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

"பயமில்லையே அங்க போய் நிண்டுவர...?"

குமாரது அம்மா உதயனைப் பார்த்துக் கேட்கின்றார்.

"இவன் தனிய எத்தன முறை போய் நிண்டு வந்திருக்கின் றான்... என்ன பயம்...? அங்க இவங்கட வீட்டிலயே எத்தின பேர் இருக்கினம்? சமைக்க... வயல் வேல செய்ய, வீடு வளவு கூட்ட.... மாடு பார்க்க... பிறகென்ன பயம்..." நாதன் பட்டென்று பதில் கூறுகின்றான்.

"இதுக்கு முதல் நீங்க போயிருக்கிறீங்களா... நாதன்...?" "ம்.... ம்.... இல்ல... இல்ல... அன்ரி ... இவங்கட வீட்டுக் கதைகளை இவன் அடிக்கடி சொல்லுறவன். அப்படித் தானே உதயன்...? அங்க உங்கட அப்பப்பாவோட கன பேர் இருக்கினம் தானே...?"

நாதன் மெதுவாக உதயனைத் துணைக்கழைத்தான்.

"அங்க இப்ப பிரச்சினை ஒன்றுமில்ல அன்ரி. எங்கட அப்பப்பாட வயலில கனக்க சிங்கள ஆக்களும் வேலை செய்யிறவங்க. அதவிட ஒரு ஆறேழு பேர் அப்பப்பாவுக்கு உதவியா அப்பப்பா வோடயே வீட்டில தங்கியிருக்கிறாங்க... அதால பெரிசா பயப்படத் தேவையில்லை..."

உதயன் குமாரினது அம்மாவுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் கதைத்தான். குமார் தற்போதும் விஜய் பத்திரிகையை வாசிப்பதுபோல் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

"பள்ளிக் கூடமும் இல்ல. டியூசனும் இல்லயென்டபடியால நீங்களும் எங்கயும் புதுப்புது இடங்களுக்கு சுற்றுலா போய் வருவது நல்லது தான். எண்டாலும் இந்தக் காலத்தில உங்க தரவழி பிள்ளைகளைத் தனியே விடவல்லவா யோசிக்க வேண்டிக் கிடக்கு. நாங்க நினைச்ச உடனேயே நினைச்ச இடத்துக்கு போய்வர நாட்டில என்ன சுதந்திரமா இருக்கு...? நாதன் நீங்க போறதுக்கு உங்கட அம்மா, அப்பா சம்மதிச்சிப் போட்டினமா...?"

"அவங்களும் உங்கள மாதிரித்தான் முதலில கொஞ்சம் தயக்கம் காட்டிச்சினம். பிறகு ஓ.கே.சொல்லிப் போட்டினம். என்ன ஒரு ரெண்டு நாள் தானே அன்ரி. மற்றது இப்ப பிரச்சினை குறைஞ்ச காலம் தானே... அதால அவங்க கனக்க யோசிக்கல்ல... நீங்களும் குமாரப் பற்றி யோசிக்காம அனுப்புங்க..."

பெரியவர்களைப் போல பதில் கூறினான் நாதன். "அப்பாட்டக் கேக்காம நான் எண்ணெண்டு தனியா ஓம் எண்டுறது...? ஆ...? ரெண்டு நாள் தானே...? அதால சில நேரம் அப்பா அனுப்ப சம்மதிச்சாலும் சம்மதிப்பார்... எதுக்கும் அவர் வரட்டுமன்..."

" நீங்க அனுப்புவம் எண்டு சொன்னா அவர் மறுப்புச் சொல்ல மாட்டார் தானே அன்ரி. முதலில நீங்க குமார அனுப்பி வைக்க ஓம் எண்டு சொல்லுங்கோவன்... உங்கட முடிவ இப்ப சொல்லுங்க. நானும் வீட்டில இருந்து வெளிக்கிட்டு வந்து கன நேரமாப் போச்சு... அம்மா தேடுவா... போகவேணும்..." குமாரினுடைய அம்மாவின் சம்மதத்தைப் பெற நாதன் ஆர்வம் காட்டினான்.

"எங்க இருந்து மூண்டு பேரும் கதைச்சி முடிவெடுத்த நீங்கள்...? இது தான் இண்டைக்கு பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் ஐயா மத்தியானச் சாப்பாட்டில ஆர்வம் காட்டயில்லப் போல..."

"எனக்கு பசிக்கயில்ல அம்மா.. அது தான் என்னால சாப்பிட ஏலாமல் போனது.. ஒரு ரெண்டு நாள் தானே அம்மா... நானும் இவங்களோட போயிற்று வாரனே... அப்பாட்ட சொல்லி அனுப்பி வையுங்களன்... அம்மா... பிளீஸ்..."

குமார் அம்மாவைக் கட்டிப் பிடித்தபடி கெஞ்சினான். "நான் விழுந்து போடுவன்... விடும்... விடும்...". "நீங்க கந்தளாய்க் குப் போக விடுவன் எண்டு சொல்லுங்க..." குமாரது குரல் சிணுங்கலாக ஒலித்தது. தாயார் அனுப்ப சம்மதிக்க மாட்டாவோ என்ற ஒரு பயம், கவலை அவனது கெஞ்சலில் வெளிப்பட்டது.

"சரி... சரி... நான் அப்பாவோட கதைச்சி அனுப்பிவைக்கப் பார்க்கிறன்... எப்ப போகப் போறீங்க?"

"நாளைக்கு அன்ரி"

நாதனும் உதயனும் ஏககாலத்தில் பதிலளித்தனர்.

"திரும்பி வாரது...?"

"திங்கட்கிழமை பின்னேரம்..." குமார் சட்டென்று பதிலளித் தான்.

"சரி... அப்ப போய் வாரும்..." "ஹாய்ய்யா..." குமார் இரு கைகளையும் உதறியபடி துள்ளிக் குதித்துக் கொண்டு கத்தினான். உதயனும், நாதனும் ஆளை ஆள் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

"தேங்க்ஸ் அன்ரி... " உதயன் கூறினான்.

"நாதன் விடிய ஆறரைக்கே எங்கட வீட்ட வா... நான் தேவன் அண்ணனிட்ட ஓட்டோவுக்கு சொல்லி வைக்கிறன். உன்ர சைக்கிள எங்கட வீட்டில வைச்சிப் போட்டு ஓட்டோவில மூண்டு பேரும் பஸ் ஸ்டான்டிற்குப் போவம். குமார் நீயும் ஆறரைக்கு வெளிக்கிட்டு நில்... என்ன..." உதயன் கேட்டான்.

"ஓம்... ஓம்..." இருவரும் பதிலளித்தனர்.

"அப்ப நாங்க வரப்போறம். நேரம் போட்டுது குமார் நாங்க கிளம்பட்டா...?

உதயன் எழுந்து கொள்கின்றான்.

"ஓம்... அன்ரி தேங்க்ஸ்... நானும் போயிற்றுவாறன். குமார் வரட்டே..." நாதனும் எழுந்து கொள்கின்றான்.

" ஓம் போயிற்று வாங்க..."

குமாரினுடைய அம்மா கூறியபடி வீட்டினுள் செல்கின்றார்.

குமார் எழுந்து நாதனின் பின்னே செல்கின்றான். கேற் வரை சென்றவன் இருவரையும் வழியனுப்பிவிட்டு அவர்கள் இருவரும் செல்வதையே பார்த்துக் கொண்டு நிற்கின்றான்.

(தொடரும்...)

எஸ்.விஜி

# நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்









(தொடரும்...)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

- திருக்குறள்

## நமது நோக்கு

# பேரழிவு நிச்சயம்!

ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுக்களில் பங்கேற்கக்கூடிய சூழல் இப்போது இல்லை என்றும் - பேச்சில் பங்கேற்பதற்கு உள்ள தடைகளை நீக்கி அதற்கான சூழலை அரசு உருவாக்கும்வரை பேச்சுக்களில் தம்மால் பங்கேற்க முடியாது என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை புலிகளின் கிழக்குத் தளபதிகளுக்கான கடற்பயண ஒழுங்கில் கடற்படை தலையிட்டு குழப்பியடித்ததான நிகழ்வையடுத்தே புலிகள் இந்த முடிவை அறிவித்துள்ளனர்.

கடற்படையின் நடவடிக்கைகளால் பேச்சுக்களில் இருந்து புலிகள் விலகிக் கொள்ளும் சந்தர்ப்பம் இரண்டாவது தடவையாகும். ஏற்கனவே 2003ஆம் ஆண்டு சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் இரண்டு வர்த்தகக் கப்பல்கள் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டதையடுத்து புலிகள் 2003 இல் பேச்சுக்களிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர்.

இப்போது மீண்டும் கடற்படையின் குறுக்கீட்டால் இரண்டாவது தடவையாக பேச்சுக்களைத் தொடரும் முயற்சிகள் தடைப்பட்டுப் போயிருக்கின்றன.

ஜெனிவாவில் முதற்கட்டப் பேச்சுக்களின்போது எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்து வந்த அரசு - எப்படியாவது புலிகள் அடுத்த கட்டப் பேச்சுக்களில் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று தப்புக்கணக்குப் போட்டிருந்தது.

இதனால் எப்படியாவது புலிகளைப் பேச்சு மேசையிலிருந்து அகற்றுவதற்கான அடுக்கடுக்கான காய் நகர்த்தல்களைச் செய்தது. ஆயுதக் குழுக்களின் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியமை, ஆயுதக்குழுக்களை அரசியல் அலுவலங்களின் பேரால் பகிரங்கமாக இயங்க அனுமதித்தமை, புலிகளின் கிழக்குத் தளபதிகளுக்கு வான்வழிப் பயண ஒழுங்குகளைச் செய்து கொடுக்காமல் மறுத்தமை, கடல்வழிப் பயணத்தை குறுக்கீடு செய்து தடுத்தமை என அரச தரப்பு மீதான குற்றச்சாட்டுக்கள் நீண்டு செல்கின்றன.

புலிகள் தமது கிழக்குப் பிராந்தியத் தளபதிகளின் பயணத்துக்கு ஒழுங்குசெய்து தருமாறு கேட்டபோது அரசு ஹெலி வசதியைச் செய்து கொடுத்திருந்தால் - இன்று இந்தநிலை ஏற்பட்டிருக்காது. இதையேதான் கண்காணிப்புக்குழுவும் கூறியிருக்கிறது.

சமாதானப் பேச்சுக்கள் என்பது விட்டுக்கொடுப்பின் அடிப்படையில் - நல்லெண்ணத்தின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்படவேண்டும். ஆனால், இலங்கை அரசு எப்போதுமே நல்லெண்ண சூழலை தாமாக ஏற்படுத்திய வரலாறு இல்லை.

விட்டுக்கொடுப்புடன் நடந்துகொள்ளாமல், விடுதலைப் புலிகளை எப்படியெல்லாம் அழிக்கவோ, பலமிழக்கவோ செய்யமுடியும் என்றுதான் அரசு கங்கணம்கட்டி நின்றது - இப்போதும் அப்படித்தான் நிற்கிறது.

விடுதலைப் புலிகள் தனிநாடு அமைக்கப் போராடும் இயக்கமாக இருந்துகொண்டு - ஆயுதபலத்துடனும், தமிழ்மக்களின் பலத்துடனும் வலுவான நிலையில் இருக்கும்போது - அவர்களுடன் சமாதானப் பேச்சுக்குச் செல்லும்போது அரசு கௌரவம் பார்க்கக்கூடாது.

ஆனால் ரணில், சந்திரிகா ஆகியோரும் - இன்று மகிந்தவும் தமது கௌரவத்தை விட்டுக்கொடுத்துப் பேச்சு நடத்தத் தயாராக இல்லை.


புலிகளுக்கு விட்டுக்கொடுப்பதா என்பது சிங்கள அரசுகளின் மனப்பாங்காகும். எப்படியாவது தமிழ் மக்களின் அரசியல், இராணுவ பலத்தைத் தோற்கடித்து விட வேண்டும் என்ற எண்ணப்பாடுதான் - சாண் ஏற முழம் சறுக்கும் கதையாகப் போகிறது.

ஜெனிவா பேச்சுக்கள் சாண் ஏறியபோது - துணை ஆயுதக்குழுக்களைக் கட்டுப்படுத்தாமல், இணக்கப் பாட்டை அமுல்படுத்தாமல் முழம் சறுக்கிய கதையாக முடிந்துபோய் இருக்கிறது.

இந்தநிலையில் இலங்கைத்தீவு மெல்ல மெல்ல யுத்தத்துக்குள் காலடி எடுத்துவைத்துக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. மீண்டும் யுத்தத்துக்குள் காலடி எடுத்துவைத்தால் நிச்சயம் பேரழிவுகள் ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




## நீண்டகாலத் திட்டத்தில் திருமலை ஆக்கிரமிப்பும் இனக்கலவரமும்!

# கொள்ளைச் செயலே இன்றும் நடைபெறுகிறது!

(நேற்றைய தொடர்ச்சி)

அங்கே பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. மூன்று ஆண்டு காலத்துக்கும் மேலாக இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. நோர்வே நாட்டு மத்தியஸ்தத்துடன் நடக்கிறது.

யார் இந்தப் பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் செய்கிறார்களோ அந்த நோர்வே நாட்டைச் சேர்ந்த அமைச்சர்கள் இங்கே டெல்லிக்கு வருகிறார்கள். பிரதமரைச் சந்திக்கிறார்கள், வெளிநாட்டு அமைச்சரைச் சந்திக்கிறார்கள், அதிகாரிகளைச் சந்திக்கிறார்கள். இவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு அவர்கள் கொழும்புக்குப் போகிறார்கள்.

இந்தியாவின் சம்பந்தம் இல்லாமல் நாம் தனியாக இந்தப் பிரச்சினையில் செயற்படக் கூடாது என்று நோர்வே நினைத்து ஒவ்வொரு கட்டத்திலும் என்ன நடக்கிறது?என்ன நடக்கப் போகிறது? நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்? எனக் கேட்டு அவர்கள் செல்கிறார்கள்.

கொழும்பிலிருந்து சிங்கள அரசுத் தலைவர்கள் சந்திரிகாவாக இருந்தாலும், ரணிலாக இருந்தாலும், ராஜபக்ஷவாக இருந்தாலும் டில்லிக்கு வருகிறார்கள். பிரதமரைச் சந்தித்துப் பேசுகிறார்கள். அவர்கள் தரப்பு நியாயத்தைச் சொல்லுகிறார்கள்.

அது மட்டுமல்ல நண்பர்களே-

இந்தியா இந்தப் பிரச்சினையிலேயே என்ன செய்திருக்க வேண்டும்?

நோர்வே தரப்பு அவர்கள் கருத்தைச் சொல்லிவிட்டார்கள்.

சிங்களத் தரப்பு அவர்களது கருத்தைச் சொல்லிவிட்டார்கள்.

இன்னொரு தரப்பு இருக்கிறதே தமிழர் தரப்பு . அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டிய கடமை இந்தியாவுக்கு உண்டா? இல்லையா?

சரி விடுதலைப் புலிகளைத்தான் சந்திப்பதில் தயக்கம் இருக்கிறது.சரி அந்த இயக்கத்துக்குத் தடை விதித்து இருக்கிறீர்கள். எப்படி அழைத்துப் பேசலாம் என்று ஒரு சாக்குச் சொல்லலாம்.

அது கூட உண்மை அல்ல. நாகாலாந்திலும், காஷ்மீரிலும் இந்திய அரசு தடை செய்த இயக்கங்களின் தலைவர்களை இந்திய இராணுவ விமானங்களிலே அழைத்துக் கொண்டு வந்து அவர்கள் சுவிட்சர்லாந்துக்கோ ஜப்பானுக்கோ உங்கள் விமானத்திலே அழைத்துச் சென்று இந்தியப் பிரதமராக வாஜ்பாய் இருந்தபோது நீங்கள் பேசவில்லையா?

இந்தியாவுக்குள்ளேயே அவர்களை அழைத்துப் பேசவில்லையா?

இதே மன்மோகன்சிங் பேசவில்லையா?

ஏன் இவர்கள் விடயத்தில் மட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு செயற்படுகிறீர்கள்?

சரி.விடுதலைப் புலிகளுடன் நீங்கள் பேசுவதில் உங்களுக்குப் பல சிக்கல்கள் இருக்கின்றன.

ஆனால் இலங்கையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். 20 பேருக்கும் மேல் இருக்கிறார்கள்.

கடந்த இரண்டாண்டு காலத்துக்கும் மேலாக இந்தியாவின் பிரதமரைச் சந்திக்க வேண்டும் என்பதற்காக முயற்சி செய்கிறார்கள்.கடிதம் எழுதுகிறார்கள்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரைச் சந்தித்து முறையிடுகிறார்கள். இந்தியாவின் பிரதமரைச் சந்திக்க வேண்டும்- எங்களுக்கு நேரம் ஒதுக்கிக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டாண்டு காலமாக நீங்கள் எந்தப் பதிலும் சொல்லாமல் மௌனம் சாதிப்பதன் மர்மம் என்ன?

நியாயம் தானா?

சிங்களத் தரப்பு யார் வந்தாலும் பேசுகிறீர்கள்-

அண்மையில் சிங்கள அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜபக்ஷ முதன்முதலாக இந்தியாவுக்கு வருகிறார்- 30 க்கும் மேற்பட்ட பெரிய குழுவுடன் வருகிறார்.

அந்தக் குழுவில் இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுவதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகிற ஜே.வி.பி இயக்கத்தைச் சேர்ந்தவரும் அந்தக் குழுவிலே வருகிறார். அதாவது 30 பேரில் அவரும் ஒருவர்.

இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுவது -

இந்தியா பிராந்தியத்திலே, வல்லாதிக்கப் போக்கிலே நடக்கிறது என்று இந்தியாவை எதிர்க்கிறவர் இங்கே வருகிறார்.

அவரையும் நம்முடைய பிரதமரும் மற்றவரும் சந்தித்துப் பேசுகிறீர்கள்.

சரி அந்த நாட்டின் குடியரசுத் தலைவர் அந்த நாட்டுக் குழுவிலே அவரைச் சேர்த்துக் கொண்டு வரும் போது நீங்கள் தடுக்க முடியாது.

ஆனால் சிங்களத் தரப்பு நியாயத்தைக் கேட்ட நீங்கள்-

மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆயுதம் தாங்கிய போராளிகள் அல்ல.

ஜனநாயகத்தின் மீதுநம்பிக்கை வைத்திருப்பவர்கள் - மக்களிடத்திலே வாக்குப் பெற்று அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களாகியிருப்பவர்கள் .

அவர்கள் உங்களை சந்திப்பதற்கு இரண்டாண்டு காலம் முயற்சி செய்கிறார்கள். நீங்கள் எந்த அனுமதியும் கொடுக்க மறுக்கிறீர்களே?

அப்படியானால் நீங்கள் நடுநிலையோடு செயற்படுவதாக எப்படி நாங்கள் நம்ப முடியும்?

அது மட்டுமல்ல-

சார்க் நாடுகள், தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் இந்த சார்க் நாடுகளுக்குள்ளேயே சுற்றுப் பயணம் செய்வதற்கு விசா தேவையில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள். இந்நடைமுறை இன்றுவரைக்கும் அமுலில் உள்ளது.

ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்புக்குரிய நண்பர் ஈழவேந்தன் இந்தியாவுக்கு வந்த போது பெங்களூரிலே நாங்கள் உலகத் தமிழர் பேரமைப்பு மாநாட்டை நடத்திய போது அதில் பங்குபற்றுவதற்காக வந்த போது சென்னை விமான நிலையத்திலேயே அவரைத் திருப்பி அனுப்பினீர்களே?

என்ன நியாயம் இது?

எதற்காக அப்படிச் செய்தீர்கள்?

ஏதாவது ஒரு நியாயமான காரணத்தைச் சொல்ல முடிந்ததா?

சார்க் நாடுகளின் முடிவையும் மீறி இங்கே இருக்கிற உளவுத்துறை அதிகாரிகள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள் என்றால்-

டெல்லியிலே இருக்கக் கூடிய அமைச்சர்கள் எதற்காக அந்தப் பதவிகளிலே ஒட்டிக் கொண்டு இருக்கிறீர்கள்?

ஒரு தமிழன் - ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர். அவர் இங்கே உள்ளே தமிழர்கள் நடத்துகிற ஒரு மாநாட்டுக்கு வரும் போது அவரைத் திருப்பி அனுப்புகிறீர்கள் என்று சொன்னால் என்ன காரணம்?

பக்கத்திலே ஆந்திரா இருக்கிறது.

ஆந்திராவின் தலைநகர் ஐதராபாத்திலே உலகத் தெலுங்கு மாநாடு நடத்தினார்கள். தென்னாபிரிக்கா உட்பட உலகம் முழுவதிலிருந்தும் தெலுங்கு பேசும் மக்களின் பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்தார்கள்.

யாரையும் திருப்பி அனுப்பினீர்களா நீங்கள்?

பஞ்சாப்பிலே உலக பஞ்சாபி மாநாடு நடைபெற்றது. இத்தனைக்கும் பஞ்சாப் ஆயுதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிற மாநிலம்.

(தொடரும்......)

# இராணுவத் தீர்வின் மீது ஆசைகொள்ளும் சிங்களதேசம்

**பத்திரிகையாளர் டி.சிவராம் நயவஞ்சகமாகக் கடத்திப் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் எழுதிய கட்டுரை இது. இவரது கொலையில் படைத்தரப்புப் புலனாய்வுப் பிரிவினருக்கும் பங்கிருப்பதாகக் கருதப்பட்டது. இந்தக் கட்டுரையும், இதற்குச் சான்றுபகரும். சிவராம் எழுதிய இந்தக் கட்டுரை இன்றைய நிலையிலும் பொருத்தமாக அமைகிறது.**

(நேற்றையத் தொடர்ச்சி........)

அன்று ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப், ரெலோ, புளொட் ஆகிய புலி எதிர்ப்பு இயக்கங்களில் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் இருந்தார்கள். இந்திய வெளிநாட்டு உளவுத்துறைக்கு இயக்கங்களுடன் நேரடிப் பழக்கம் இருந்தது. அநேகமான புலிகளின் தலைவர்களை அவர்களுக்குத் தெரிந்திருந்தது. இவை எதுவுமே இன்று இல்லை.



இப்படியான சூழலில் இந்தியப் படைகள் தமிழர் தாயகத்தினுள் கால் வைப்பதென்பது முடிவற்ற பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் கூற இந்திய இராணுவத் தளபதிகள் தேவையில்லை.

இது மட்டுமன்றி புலிகளுடன் நேரடியாகதான் சண்டையில் இறங்கினால் அதைப் பயன்படுத்தி தனக்குப் பெரும் சேதத்தையும், களங்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் தனக்கு எதிரான சர்வதேச சக்திகள் இங்கு புகுந்து விளையாடும் என்பதை இந்தியா நன்குணரும்.

இங்கு இன்னொன்றையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். கடந்த 10 ஆண்டுகளாக சீனாவின் பாதையைப் பின்பற்றி அமைதியான வழியில் உலக வல்லரசாக உயர்வதற்கேதுவாக பொருளாதார வளர்ச்சியில் குறிப்பாக இந்தியா செயற்பட்டு வருகிறது. சீனாவைப் போல உலகப் பெருமூலதனத்தை தன்பால் ஈர்ப்பதற்கு தனது எல்லைகளுக்குள்ளும், சுற்றுப் பிராந்தியத்திலும் அமைதி கட்டாயம் வேண்டும் என்ற அடிப்படையில் தனது நீண்டகால எதிரியான பாகிஸ்தானுடன் நல்லுறவை வளர்த்து முரண் நிலையைத் தவிர்ப்பதற்கு அண்மைக் காலத்தில் கடும் முயற்சி செய்து வருகிறது.

அதேபோல நீண்டகாலமாக தான் முரண்பட்டுவந்த சீனா, மியன்மார் ஆகிய நாடுகளுடனும் இந்தியா புத்துறவை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளையில் நாகலாந்து, காஷ்மீர் ஆகிய உள்நாட்டுப் போர்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அரசியல் வேலைகளை துரிதப்படுத்தியுள்ளது. நாகலாந்தில் 97 இலிருந்து ஒரு போர்நிறுத்தம் நிலவி வருவதை நீங்கள் அறிவீர்கள். அதாவது தென்னாசியப் பிராந்தியத்தை எந்தளவுக்கு அமைதிப்படுத்த முடியுமோ- அந்தளவுக்கு அமைதிப்படுத்தி உலக மூலதனம் பெருமளவில் நாடிடக் கூடிய ஒரு நாடாக தன்னை மாற்றிக் கொள்வதையே தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இந்தியா இன்று செயற்பட்டு வருகிறது. இந்தியாவினுடைய பெரும்பான்மையான வெளியுறவுக் கொள்கை முடிவுகள் இந்த அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றன.

இப்படியாக முரண்தணிப்பு, முரண்பாட்டுச் சூழல்களிலிருந்து விலகல் (Disengagement) மோதல் தவிர்ப்பு என இன்று செயற்படும் இந்தியா- புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்று இறங்குவதற்கான சாத்தியங்கள் மிக அரிதாகவே உள்ளன.

இந்தப் பின்னணியில்தான் புலிகளை மீண்டும் போருக்குத் தள்ளக்கூடிய சூழ்நிலைகள் இலங்கையில் தோன்றக் கூடாது என்பதில் இந்தியா கவனம் காட்டுகிறது. இந்திய பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தத்தை சிங்கள தேசத்துடன் செய்து கொண்டால் இலங்கையின் படைவலுச் சமநிலை தம்பக்கம் திரும்பி விட்டதாக சிங்கள மேலாண்மையாளர் கருதி, இன முரண்பாட்டை மீண்டும் கிளர்ந்து விட்



டெரியச் செய்வர் என்ற ஓர் எண்ணமும் டெல்கியில் காணப்படுகின்றது. இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் இழுபட்டுக் கொண்டிருப்பதற்கு இதுவுமொரு காரணம் என கொள்ள இடமுண்டு.

அடுத்ததாக வரையறுக்கப்பட்ட இரகசிய படை நடவடிக்கைகளை புலிகளுக்கு எதிராக மேற்கொள்ள இந்தியா தமக்கு உதவ வேண்டும் என ஒரு கட்டத்தில் சில சிங்களப் பேரினவாதிகளும், அவர்களை அண்டிப் பிழைக்கின்ற சில தமிழ் கோஷ்டிகளும் முயற்சி செய்து பார்த்தன.

அதாவது தமிழகத்தில் இருக்கின்ற அகதி முகாம்களில் சேர்க்கப்பட்ட இளைஞர்களும், இங்கிருந்து கொண்டு செல்லப்படும் மாற்றியக்கத்தவர்களுக்கும்- இந்தியா இராணுவப் பயிற்சியும், ஆயுதங்களும் கொடுக்க வேண்டும் எனவும், அவர்கள் பின்னர் தமிழகத்திலிருந்து வட பகுதிக்குள் ஊடுருவி புலிகளைப் பலவீனப்படுத்தும் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனவும், இதற்கு இலங்கை இராணுவமும் உதவி வழங்கும் எனவும் ஒரு திட்டத்தை அவர்கள் இந்தியாவின் ஒரு சில மட்டங்களில் பேசிப் பார்த்தனர். அது எடுபடவில்லை.

என்ன காரணம்? புலிகளை இராணுவ ரீதியாக உடைப்பதென்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் குளவிக் கூட்டின் மீது கல்லெறிவதைப் போன்றதாகும். புலிகள் இயக்கம் சிதறிப் போகின்றது என வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்? பல்லாயிரக் கணக்கான ஆயுதங்கள் யாருடைய கட்டுப்பாடுமின்றி வட-கிழக்கில் உலவுகின்ற ஒரு சூழல் ஏற்படும்.

தன்னுடைய எல்லையிலிருந்து 22 கிலோ மீற்றர் தூரத்தில் இப்படியான ஒரு நிலை காணப்படுவது மிக ஆபத்தானது என இந்தியா கருதுகிறது. அதுமட்டுமன்றி புலிகள் இயக்கம் உடைந்தால் பயிற்சிபெற்ற பல்லாயிரக்கணக்கான போராளிகள் கட்டுப்பாடின்றித் திரிவர். தனக்கெதிரான வெளிநாட்டுச் சக்திகள் தென்னிந்தியாவில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கும், அங்குள்ள தனது அணு மற்றும் ஏவுகணை ஆய்வு மையங்களைத் தாக்குவதற்கும் அவர்களைப் பயன்படுத்தலாம் எனவும் இந்தியா கவனம் கொள்கிறது.

பாகிஸ்தானின் ஊடுருவலுக்கு அஞ்சியே இந்தியா தனது முக்கிய ஏவுகணை மற்றும் அணுவாயுத ஆய்வு அபிவிருத்தி தளங்களைத் தென்னிந்தியாவில் நிறுவியது. ஆனால் அண்மைக் காலங்களில் இலங்கையையும், மாலைதீவையும் தளமாகப் பயன்படுத்தி பாகிஸ்தானின் புலனாய்வு நிறுவனங்கள் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களை ஊடுருவுகின்றன என்பதை அறிந்து இந்தியா பல மாற்று நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதனாலேயே இந்தியப் பிரஜைகள் இலங்கைக்கு வருவதானால் விசா தேவையில்லை என்ற ஒழுங்கிருக்கின்ற அதேவேளை - இலங்கையர்கள் இந்தியா செல்வதானால் விசா கட்டாயம் எடுத்தே ஆகவேண்டும் என்ற நடைமுறை உள்ளது. விசா இல்லாவிட்டால் பாகிஸ்தான் புலனாய்வுத்துறையினர் இலங்கையிலிருந்து இலகுவாக தென்னிந்தியாவுக்குள் ஊடுருவி விடுவார்கள் என்பதையே மேற்படி விசா நடைமுறைக்கான காரணமாக இந்தியா சொல்கிறது.

இது மட்டுமன்றி 2002 ஆம் ஆண்டு - மே.ஜூன் மாதங்களில் பாகிஸ்தான் புலனாய்வுத்துறைக் குழுவொன்று யாழ்.குடாநாட்டில் இந்தியர் என்ற போர்வையில் நடமாடித் திரிந்து சில கேந்திர ஆய்வுகளை செய்த விடயம் தெரிய வந்த பின்னர்- இது விடயத்தில் இந்தியா மேலும் அவதானமாகவே உள்ளது. தனது தென்பகுதியை ஊடுருவுவதற்கு பாகிஸ்தான் இவ்வாறான கடும் முயற்சிகளை எடுத்துவரும் ஒரு சூழலில்- புலிகள் இயக்கம் உடைவது தனக்குப் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என இந்தியா நினைக்கிறது.

அடுத்ததாக புலிகளை உடைத்து ஒரேயடியாகப் பலவீனப்படுத்திவிட்டால் சிங்கள தேசத்தை தன்பக்கம் சாய்த்து வைத்துக்கொள்வதற்கு எந்த அழுத்தமும் இல்லாமல் போய்விடும் எனவும் புலிகளின் படைவலு என்ற அழுத்தமும், அச்சுறுத்தலும் இல்லாவிடின் சீனாவுடனும்அமெரிக்காவுடனும் சிங்கள தேசம் தனது உறவை நன்றாகப் பிணைத்துக் கொண்டு இந்தியாவை ஓரங்கட்டிவிடும் என்பதையும் டெல்கியிலுள்ள வெளியுறவு திட்டமிடலாளர்கள் உணர்கின்றனர்.

---

## விய புது வருடம் உங்களுக்கு எப்படி?

## துலாம்

**சித்திரை 3,4கால்கள், சுவாதி, விசாகம் 1,2,3 கால்கள்**

துலாராசி அன்பர்களுக்கு வருடாரம்பத்தில் குரு பகவான் ஜன்மராசியில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார். தொடங்கும் முயற்சிகளுக்குத் தடைகள் ஏற்பட்டுப் பின் அனுகூலமாகும். அலைச்சல்கள் இருந்துகொண்டிருக்கும். வீண் பிரச்சினைகளால் மனஅமைதி குன்றும். 10ஆம் வீட்டில் சனி சஞ்சரித்தாலும், அவர் துலாராசிக்கு யோககாரனாவதால் பெரிய கெடுதிகளைச் செய்யமாட்டார். அலைச்சல்கள் ஏற்பட்டாலும் இறுதியில் கருமம் வெற்றியாகவே முடியும். உடற்சுகம் இடையிடையே பாதிப்படைவதால் வைத்தியச்செலவு அதிகமாகும். பண வருவாய் இருந்தாலும், அதற்கேற்ப செலவுகளும் கூடிக் கொண்டேயிருக்கும். குடும்பத்தில் நிம்மதி குறைவாகவே இருக்கும். திருமண வாழ்க்கையை எதிர்நோக்கியிருப்போருக்கு அதற்கான பலன் குறைந்தே காணப்படுகிறது.

28.10.2006இல் குருபகவான் 2ஆம் வீட்டுக்கு மாற்றமடைவதால் அதன் மேல் பல நன்மையான பலன்கள் ஏற்படலாம். வாழ்க்கையில் அனுகூலமான திருப்பங்கள் தென்படும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரும். திருமணம் போன்ற சுப கருமங்கள் கைகூடி மகிழ்ச்சியைத் தரும். உடல்நலம் தேறுதலடையும். வைத்தியச் செலவுகள் குறையும். சிலருக்கு புத்திர பாக்கியம் ஏற்படலாம். வருவாய் சிறப்பாக இருப்பதால் முன்பு கடன்பட்டவற்றை நேர்செய்து விடலாம். வீடு, வாகனம் என்பன சேரும். மனதில் தைரியமும், உற்சாகமும் ஏற்படலாகும். சேமிப்புகள் அதிகரிக்கும். மனைவி, மக்கள் சுபீட்சமாக இருப்பார்கள். அரசாங்க வழியிலும் அனுகூலமான பலன் உண்டாகும். உறவினர்கள் அடிக்கடி உதவ முன்வருவர். பெரிய மனிதர்களின் உதவி கிட்டும்.

உத்தியோகத்தர்களுக்கு வருடத் தொடக்கத்தில் சில சோதனைகள் ஏற்படும். வீண் பிரச்சினைகளால் மன அமைதி குன்றும். வேலைப்பளு கூடுதலாக இருக்கும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு குறையும். பிரயாணங்களிலும் கஷ்டங்கள் ஏற்படும். 28.10.2006இன் மேல் பலவகையாலும் சிறப்பான பலன்கள் நடக்கும். வேலைத் தலங்களில் கௌரவமும், மதிப்பும் உயரும். விரும்பிய இடமாற்றம் கிடைத்து வாழ்க்கை சிறக்கும். திறமைக்கேற்றவாறு புதிய வேலை அமையும். அதிகாரிகளின் ஒத்துழைப்பும் அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு துலாராசிக்கு 10ம் வீட்டில் சனி சஞ்சரிப்பது சாதகக்குறைவாக இருப்பினும், அவர் யோககாரகனாவதால் கஷ்டபலன்களைக் கொடுக்கமாட்டார். தொழில் முறையில் வளர்ச்சி ஏற்படும். பெரிய தொகைகளை முதலீடு செய்து நல்ல வருமானம் பெறமுடியும். ஜன்ம வியாழன் இருப்பதால் எல்லாவற்றிலும் அவதானம் வேண்டும். புதிய தொழில் ஆரம்பிப்பதற்கு அரசாங்க வழியில் உதவிகள் கிட்டும். கூட்டுத் தொழில்களில் ஒற்றுமையும், முன்னேற்றமும் ஏற்படும். ஏஜென்ஸி முதலியவற்றில் கூடிய லாபம் கிடைக்கும். 28.10.2006இன் மென்மேலும் பல முன்னேற்றங்களைக் காணலாம்.

பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். தாய் வழியில் நற்பலன்கள் ஏற்படும். ஆடை ஆபரணங்கள் சேரும். வருட முற்பகுதியில் திருமண விஷயங்கள் தடைப்பட்டாலும், ஐப்பசி மாதத்தில் அவை கைகூடும். சிலருக்கு சந்தான விருத்தி உண்டாகும். வீடு காணி என்பனவும் சேரும். பெரியோர்களின் உதவி உண்டு. புதிய உறவுகள் சிறப்பைத் தரும்.


மாணவர்களுக்கு வருடத் தொடக்கத்தில் உடல் நிலை சற்றுத்தளர்வு காட்டக்கூடும். எனினும் கல்வியில் முன்னேற்றம் கிடைக்கும். விளையாட்டுக்களில் விசேட பரிசுகள் பெறமுடியும். திறமை வெளிக்காட்டப்படுவதால் பாராட்டுக்களும் கிடைக்கும். வருட இறுதியில் பரீட்சைகளில் விசேட சித்திகள் கிட்டுவதுடன், பெற்றோர் ஆசிரியர்களின் பாராட்டுக்களையும் பெறலாம்.

(தொடரும்...)

சி.சிதம்பரநாதக் குருக்கள்

# பிரசாரக் கூட்டங்களில் ஜெயலலிதா 2 விரல்களைக் காட்டாதது ஏன்?

## விளக்குகிறார் கருணாநிதி



சென்னை—

முதல்வர் ஜெயலலிதா இப்போதெல்லாம் தனது தேர்தல் பிரசாரத்தில் அ.தி.மு.க வின் தேர்தல் சின்னத்தை தெரிவிக்கும் வகையில் 2 விரல்களை காண்பிக்காதது ஏன் என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

பொதுக் கூட்டமொன்றில் அவர் பேசும்போது -

தேர்தல் பிரசாரங்களில் ஜெயலலிதா 2 விரல்களைக் காண்பிக்காதுக்குக் காரணம், தி.மு.க தேர்தல் அறிக்கையில், ஒரு கிலோ அரிசி 2 ரூபாவுக்கு வழங்கப்படும் என்று கூறியிருப்பதுதான். 2 விரலை காண்பித்தால், ஒரு கிலோ அரிசி 2 ரூபா என்று தெரிவிப்பதாக ஆகிவிடுமோ என்று பயப்பிடுகிறார்.

ஒரு கிலோ அரிசி 2 ரூபாவுக்குத் தருவோம் என்று கூறுவதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்கிறார்கள். அதேபோல் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கமுடியுமா? என்கிறார்கள். முடியும் என்று முயன்றால் உலகில் முடியாதது ஒன்றும் இல்லை. நிச்சயம் வழங்கப்படும். தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் எனது முதல் கையெழுத்து ஒரு கிலோ அரிசி 2 ரூபாவுக்கு வழங்குவதற்குத்தான்.

தி.மு.க. கூட்டணித் தலைவர்கள் வாடிய பயிரை மட்டுமன்றி, வாடிய மனிதர்களைப் பார்த்து அவர்களின் வாட்டம் போக்கப் பாடுபடுவார்கள் என்றார் கருணாநிதி.

# சமூக அக்கறை எதுவென தமிழக மக்கள் உணரவேண்டும்

## திருமாவளவன் தெரிவிப்பு




வேலூர்—

பின்தங்கிய மக்கள் கல்வியில் மேலோங்க வேண்டும் என்பதற்காக இலவச சைக்கிள் வழங்கி வருகிறார் ஜெயலலிதா. பள்ளி, கல்லூரி செல்வோரை பாழ்படுத்தும் வகையில் இலவச தொலைக்காட்சிப் பெட்டி தருவதாக கருணாநிதி கூறுகிறார்.

இதில் எது சமூக அக்கறை என்பதை மக்கள் உணர வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் மாநில பொதுச் செயலர் தொல்.திருமாவளவன் கூறினார்.

விடுதலை சிறுத்தைகளை அங்கீகரித்த ஆட்சி அ.தி.மு.க அது மீண்டும் ஆட்சியில் அமரவேண்டும்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

தனது ஆட்சிச் சாதனையைச் சொல்லியோ அ.தி.மு.க ஆட்சியின் மீது குற்றம்சுமத்தியோ கருணாநிதியால் பேசமுடியவில்லை. அதனால் ஏற்பட்ட குழப்பத்தில் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்.

ஒடுக்கப்பட்டவர்களின் தனிப்பெரும் இயக்கமாக விடுதலை சிறுத்தைகள் இயக்கம் வருவதை விரும்பாதவர்களில் துரைமுருகனும் ஒருவர் எனத் தெரிவித்தார்.



நேற்று அ.தி.மு.கவில் இணைந்த நடிகர் சரத்குமார் - முதல்வர் ஜெயலலிதாவுக்குப் பொன்னாடை போர்த்துவதையும், அருகில் ராதிகா சரத்குமார் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சுயதொழில் ஊக்குவிப்புப் பணம் கையளிக்கும் நிகழ்வு இன்று!

நெல்லியடி—

கரவெட்டி சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தால் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு ஊக்குவிப்புப் பணம் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலகத்தில், பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தின கொடிவாரத்தின்போது கரவெட்டி சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தால் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து அந்தப் பகுதியிலுள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு அவர்களின் சுயதொழிலை ஊக்குவிப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட 96 பயனாளிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

# கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்—

இன்றுமுதல் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவிருந்த ஆசிரிய கல்வியியலாளர்களுக்கான பிள்ளைகளின் உளநல விருத்தி தொடர்பான கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக - தேசிய கல்வி நிறுவகம் அறிவித்துள்ளது.

கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகளின் விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய நிலைய முகாமையாளர்களுக்கு நடத்தப்படவிருந்த இந்தக் கருத்தரங்கு மீண்டும் ஆரம்பமாகும் திகதிபற்றிப் பின்னர் அறிவிக்கப்படுமென, தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரிய கல்விப் பிரிவுப் பணிப்பாளர் விலானி அமரசிங்க அறிவித்துள்ளார்.

# முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

காரைநகர்—

இந்து இளைஞர் மன்ற விளையாட்டுக்கழக ஆதரவுடன் விளானை, திக்கரை முன்பள்ளிகளுக்கான விளையாட்டுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் சிறப்புற நடைபெற்றது.

களபூமி இந்து இளைஞர் மன்றத் தலைவர் க.தயானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - விருந்தினர்களாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.அழகேந்திரன், திக்கரை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வே.பரமசிவம், காரைநகர் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செல்வி.ச.சுமதி, சித்தாந்த வித்தகர் வே.நடராசா, சிவஸ்ரீ கு.சண்முக ராஜக் குருக்கள், கிராம சேவையாளர் ஆர். திருப்புகலூர் சிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் - சிறப்பாக முன்பள்ளிச் சிறார்களின் உடற்பயிற்சிக் கண்காட்சி நிகழ்வு நடைபெற்றதோடு, பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்!

காரைநகர்—

காரைநகர் - வலந்தலை சிவகௌரி சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியும்-பரிசளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நிலைய முன்றலில் சிறப்புற நடைபெற்றது.

சனசமூக நிலையத் தலைவர் மு.திருக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகவும், கிராமசேவையாளர் ஆர். திருப்புகலூர் சிங்கம், வணபிதா பி.தேவதாஸ், காரைநகர் வடக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி எஸ்.சிவஞானம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

விளையாட்டுத்துறை ஆசிரியர் ஏ.ஜெகதீஸ்வரன், காரைநகர் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் ச.சுமதி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.நவமணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

# யாழ்.எழுத்தாளர்களின் நூல் விற்பனையும், கண்காட்சியும்

உடுவில்—

யாழ்ப்பாண எழுத்தாளர்களின் 8 நூல்களின் விற்பனையும், கண்காட்சியும் நாளைமுதல் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எழுத்தாளர் நல்லூர் கே.வி.குணசேகரத்தின் - திருக்குறள் இன்பத்துப்பால், இளவாலை கீர்த்தி எழுதிய வேரை மறந்த விழுதுகள் (நாடகம்), திருநெல்வேலி உதயச்செல்வனின் - மொட்டுக்களை மரைவிடுங்கள் (நாவல்), நல்லூர் மாயவனின் - இதுதான் ஆரம்பம் (மர்ம நாவல்),

கந்தரோடை பொ.சண்முகநாதனின் - நினைக்க சிரிக்க சிந்திக்க (கட்டுரைகள்), யாழ்ப்பாணம் மு.கதிர்காமநாதனின் - அறிஞர்கள் சொன்ன அனுபவமொழிகள் (தொகுப்பு நூல்), கொக்குவில் சுதந்திரராஜாவின் அடிவாரம் (நாவல்),

யாழ்வாணனின் - மலர்ந்தவாழ்வு (சிறுகதைகள்) ஆகிய நூல்கள் கண்காட்சியில் வைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (101)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், அசின்,
பிரகாஸ்ராஜ்
மற்றும்
பலர் நடித்த
சிவகாசி
கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

நாதவிஸ் யாழ்ப்பாணம்
எஸ்.ஜே.சூர்யா,
நயன்தாரா,
விவேக்
நடித்த

கள்வனின் காதலி
கா.நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

முகாமைத்துவக் கல்லூரி

முகாமைத்துவக் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் aat கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகைமையுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

தகைமைகள்
- க.பொ.த. சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தி அல்லது
- க.பொ.த. உயர்தரத்தில் இரண்டு பாடங்களில் சித்தி

மேற்படி தகைமைகளை உடையோர் தங்களது விண்ணப்பங்களை 15.05.2006 க்கு முன்னதாக - இணைப்பாளர், முகாமைத்துவக் கல்லூரி, இல.139, ஜெயந்தி நகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைக்கவும்.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

- விரிவுரைகள் சனி ஞாயிறு தினங்களில் மட்டும் நடைபெறும்.

இணைப்பாளர்
இல.139,
மீனாட்சி அம்மன் கோவிலடி,
ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.
(2470)

DAIDO

CF 90C
4 Gear இன் சிறப்புகள்
எங்களிடம் தாராளமாக
DAIDO, YAMATO, HONDA, YAMAHA, BAJAJ, SUZUKI
மற்றும் எல்லா சீனா தயாரிப்புகளுக்குப் பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டியளவு கிடைக்கும்
52,900.00
Koyo
ரேசர்கள்
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
E.mail: zme@slt.lk

சிறு விளம்பரம்
மணப்பெண் அலங்காரம்
வீடுகளில் வந்து மணப்பெண் அலங்காரம் செய்து தரப்படும்.
தொடர்பிற்கு:-வேணி, உரும்பிராய். தொ.பே.இல. 077 9235991
(2245)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின
அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா
மற்றும் பலர் நடித்த

திருப்பதி
indiaglitz
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
காட்சி நேரம்
10.30,2.30,6.30,9.30

ராஜா யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத்,
மல்லிகா கபூர்
மற்றும் பலர்
நடித்த

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# படையினருக்கு எதிரான தாக்குதல் தொடரும் பொங்கியெழும்மக்கள் படை எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்—

சாவகச்சேரி - தபாற்கந்தோர் வீதியில் அப்பாவிப் பொதுமக்களைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்திய படைகளுக்கெதிரான பதில் தாக்குதல் தொடரும் என்று யாழ். மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை எச்சரித்துள்ளது.

நேற்று இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

சாவகச்சேரி - கனகன்புளியடிச் சந்திக்கு இடைப்பட்ட தபால் நிலைய வீதியில் மிகவும் திட்டமிட்ட வகையில் - இராணுவத்தின் அதியுயர் கண்காணிப்புப் பிரதேசத்தில், இராணுவத்தினர் வெடிபொருட்களைப் பொருத்தி கொடூரமான முறையில் அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர்.

குறிப்பாக இளைஞர்கள் குறி வைக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர். உயிரிழப்புக்களையும், குழப்பத்தையும், அச்சத்தையும் தோன்றுவிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலின் நோக்கம் மக்களை அச்சுறுத்தி அடிபணிய வைப்பதேயாகும்.

இந்தத் தாக்குதலில் இரண்டு பேர் பரிதாபகரமாகக் கொல்லப்பட்டுள்ளதோடு, மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறான கொடூர முகம் கொண்ட சிங்களப் பேரினவாதப் படைகளுக்கு எதிரான பழிக்குப்பழி நடவடிக்கையாக பதில் தாக்குதல் தொடரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியாவில் கிளைமோர்...

இந்தக் கிளைமோர் தாக்குதலையடுத்து அந்தப் பகுதியில் சுமார் 10 நிமிடத்துக்கும் மேலாக படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். அனைத்து வீதிகளும் மூடப்பட்டன.

படுகாயமடைந்த நாகராஜா (வயது 35) என்ற பொதுமகன் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த படையினர் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

இதேவேளை - வவுனியா மருத்துவமனையின் பாதுகாவலர் தயாரூபன் - படையினரின் அனுமதியின்றி காயமுற்ற படையினரை புகைப்படம் எடுத்ததாகக் கூறி படைத்தரப்பினர் கைதுசெய்துள்ளதாகவும் வவுனியா செய்திகள் தெரிவித்தன. (03)

## பதற்ற நிலையை...

ஜோன்சன் பௌயர் இன்று கொழும்பு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அரசதரப்பு பிரதிநிதிகளையும், விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் சந்தித்து பேசுவார் என்றும் தற்போது அதிகரித்து வரும்பதற்ற நிலையை தணித்து ஜெனிவாப்பேச்சுக்களில் பங்கேற்பதை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார் என்றும் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் தாக்குதல்களுக்கு மத்தியிலும் இருதரப்புக்களையும் ஜெனிவாவில் சந்திக்கவைக்க முடியும் என நம்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதேவேளை - தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கருக்கு எழுதிய கடிதத்துக்கு நோர்வே தரப்பினர் தமது பக்க விளக்கங்களை அடங்கிய பதிலை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயின் அந்தப் பதிலில் எத்தகைய விடயங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அறிய முடியவில்லை. எனினும் தமது கோரிக்கைகளை அரசு நிவர்த்திக்காதவரை ஜெனிவாவுக்கு செல்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை என மீண்டும் விடுதலைப் புலிகள் தரப்பு உறுதிப் படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (01)

## முழு அளவிலான...

றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

இலங்கையில் அனைத்து இன மக்களது நிலைமை தொடர்பில் கவலை கொள்கிறோம்.

ஒவ்வொரு கிளைமோர், கண்ணி வெடித் தாக்குதலுக்கும் யார் பொறுப்பு என்பதைச் சொல்ல முடியாது.

கடந்த வன்முறைகளின் தன்மைகளைப் பார்த்தால் யார் பொறுப்பு என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

விடுதலைப் புலிகள் விடுத்திருந்த கோரிக்கையை ஏற்று அரசாங்கம் உலங்குவானூர்தியைஒழுங்கு செய்திருந்தால் இத்தகைய நிலைமையைத் தவிர்த்திருக்கலாம்.

இருதரப்பினரையும் நான் குற்றம்சாட்டுகிறேன். பேச்சுக்களில் எட்டப்பட்ட உடன்பாட்டை இருதரப்பும் செயற்படுத்தாவிட்டால் ஜெனிவாப் பேச்சுக்கள் சிறப்பானதாக இருக்காது.

வன்முறைகள் மிகவும் மோசமடைந்துள்ளது. இருதசாப்த கால முழுமையான யுத்தம் மீண்டும் திரும்புவதையே இது காட்டுகிறது.

பதில் தாக்குதல்கள் நிலைமையைச் செழுமைப்படுத்தாது. அது மக்களைத்தான் படுகொலை செய்யும். அது இராணுவ ரீதியான வெற்றி அல்ல என உல்ப் ஹென்றிக்சன் மேலும் தெரிவித்தார்.

## கிளைமோர் குண்டு...

தெரிய வருவதாவது -

நேற்றுக்காலை 8.45 மணியளவில் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் - சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் இராணுவத்தினரால் கிளைமோர் குண்டொன்று வெடிக்க வைக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவனான அற்புதராஜா சுரேஸ்குமார் (வயது 14) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப் பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் மட்டுவில் - சாவகச்சேரியைச் சேர்ந்த சிவபாதம் திலீபன் (வயது 25) என்பவர் நேற்று நண்பகல் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மட்டுவில் - சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெயப்பிரகாசம் திருச்செல்வம் (வயது 35) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிக்சைப் பிரில் சிகிச்சை பெற்று வருகிறார்.

உயிரிழந்தவர்களின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கிளைமோர் குண்டை பொருத்த முற்பட்ட போது தாம் மேற்கொண்ட தாக்குதலில் இவர்கள் உயிரிழந்ததாகப் படைத்தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

படையினர் மீட்டெடுத்த கிளைமோர்குண்டொன்றைவெடிக்கவைத்த போதே வீதியால் சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

## வர்த்தக நிலைய...

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் புத்தூர் சந்தியிலுள்ள மின்சாரப் பொருட்கள் விற்பனை நிலையத்துக்கு இரு மோட்டார் சைக்கிள்களில் சென்ற ஆயுததாரிகள் - உரிமையாளரான இளம் குடும்பஸ்தர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றனர்.

மேற்படி வர்த்தகர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படும் போது வழியில் உயிரிழந்தார்.

மீசாலை வடக்கு - கொடிகாமத்தைச் சேர்ந்த இரண்டு வயதுக் குழந்தையொன்றின் தந்தையான இராமலிங்கம் சகீலன் (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்தச் சம்பவம் நடைபெற்ற போது விற்பனை நிலையத்துக்கு அருகில் படை யினர் பலர் நின்றதாக அந்தப் பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.

## கிரானில்...

சம்பவத்தில் விமானப் படையின் பஸ் ஒன்று தாக்குதலுக்குள்ளானது.

கிளைமோர் தாக்குதலையடுத்து சிலநிமிடநேரம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன. இந்தச் சம்பவத்தில் 5 விமானப் படையினர் படுகாயமடைந்து உடனடியாக பொலநறுவ வைத்தியசாலைக்கு ஹெலிகொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

மேலும் விமானப்படைஅதிகாரி ஒருவரின் மனைவியும், மகளும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.நகரை அண்டிய பகுதியில் படையினர் பெரும் தேடுதல்!

யாழ்ப்பாணம்—

யாழ்.நகர் மைய பகுதிகளில் நேற்றும் படையினர் கடும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் நகரப் பகுதிக்குள் வந்த மக்கள் படையினரால் கடும்சோதனைக் குட்படுத்தப்பட்டனர்.

யாழ். நகரின் மைய பகு[illegible]ன புதிய பஸ் நிலையப்பகுதி, தனியார் பஸ்நிலையப் பகுதி, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ் வீதி உள்ளிட்ட பல இடங்களில் தமது சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது படையினர் உடற்சோதனை மேற்கொண்டதுடன் அடையாளஅட்டைகளையும் பார்வையிட்டனர். சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களும் துருவித் துருவி சோதனையிடப்பட்டன.

நேற்றுக் காலை முதல் மாலை வரை இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், புறநகர்ப் பகுதிகளில் உள்ள முக்கிய சந்திகளிலும் தெருக்களிலும் படையினரும், பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இதன்போது மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகளில் வந்தோர் கடுமையாக சோதனையிடப்பட்டனர். நேற்றைய இந்த சோதனையின் காரணமாக நகரில் வாகன நெரிசல் காணப்பட்டது.

இதேவேளை, நேற்று கோட்டை முனியப்பர் கோவில் பகுதியில் படையினர் சுற்றிவளைப்பு தேடுதல்களை நடத்தி பெரும் தேடுதல் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆயுதக்...

கட்டமைப்புக்குள் கொண்டுவரவே அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சித்து வருகிறது.

ஜெனிவாப்பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட பல விடயங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. இதில் நிறைவேற்றப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதற்கு தாம் முயன்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## புலிகளின்...

சேவைக்கு பேட்டியளித்த அரசாங்க சமாதானப் பேச்சுக்குழுவின் அங்கத்தவரான அமைச்சர் றோகித போகல்லாகம இந்தத் தகவலை உறுதிப்படுத்தினர்.

இதுகுறித்து அவர் மேலும் தகவல் வெளியிடுகையில் -

விடுதலைப் புலிகளின் தளபதிகளை கிழக்கிலிருந்து வன்னிக்கு அழைத்து வருவதற்கு நோர்வே அரசாங்கம் தனியார் ஹெலிகொப்டர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இலங்கை அரசு ஆட்சேபம் தெரிவிக்காது என்பதை நோர்வேக்கு அறிவித்துள்ளது. இது குறித்து நோர்வே அரசாங்கமே முடிவுகளை எடுக்க வேண்டுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தமது கிழக்குப் பிராந்தியத் தளபதிகள் தலைமைப்பீடத்துடன் கலந்தாலோசனை நடத்த ஒழுங்குகள் செய்யப்படாத வரை ஜெனிவா பேச்சுக்களில் பங்கேற்பதில்லை என விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தது தெரிந்ததே.

## பொலிஸ்...

திகள் தெரிவித்தன.

வவுனியா - பூந்தோட்டப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற பொலிஸாரின் வாகனம் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றிரவு 9.35 மணியளவில் நடைபெற்ற இந்த தாக்குதல் சம்பவத்தையடுத்து நீண்ட நேரம் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

இந்தத் தாக்குதல் கிளைமோர் தாக்குதலா அல்லது கைக்குண்டுத் தாக்குதலா என உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் இந்தத் தாக்குதலில் துஷார என்ற பொலிஸ் கொன்ஸ்டபிளே உயிரிழந்ததாகவும், மேலும் இருவர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்ற போதும் அங்கிருந்து மேலதிக விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. (04)

## இளைஞன் படையினரால் கைது!

யாழ்ப்பாணம்—

நேற்றுக் காலை சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலின்போது காயமடைந்த பொதுமக்களை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வதற்கு உதவிபுரிந்த இளைஞர் ஒருவரை இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.

சம்பவ இடத்தில் காயமடைந்தவர்களை அம்புலன்ஸ் வாகனத்தில் தூக்கியேற்றிக்கொண்டிருந்தவேளை - பவள் கவச வாகனங்களில் அங்கு வந்த படையினரால் மேற்படி இளைஞர் கைதுசெய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் கிறிஸ்தோபர் விஜயகுமார் என்ற இளைஞரே இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டதாக யாழ்.மனிதஉரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஏழாலை இளைஞன் கொழும்பில் கடத்தல்!

கொழும்பு—

கொழும்பு - வெள்ளவத்தைப் பகுதியில் வெள்ளைவானில் வந்த ஆயுததாரிகளால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில் -

வெள்ளவத்தையில் கராஜ் ஒன்றில் மெக்கானிக்காக வேலைசெய்து வரும் மேற்படி இளைஞர் நேற்று கராஜில்வேலை செய்து கொண்டிருந்த போது காலை 9.30 மணியளவில் வெள்ளைவானில் வந்த ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் - ஏழாலை மேற்கைச் சேர்ந்த எஸ்.சிவகரன் (வயது 33) என்ற இளைஞரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## மட்டக்களப்பு - சந்திவெளியில் இளைஞர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - சந்தி வெளியில் உள்ள வீடொன்றினுள் நுழைந்த துணை இராணுவக் குழுவால் நேற்று பிற்பகல் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஈசன் (வயது 24) என்ற இளைஞரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

வாகனம் ஒன்றில் வந்த கருணா குழுவினர் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் ஈசனின் வீட்டுக்குள் நுழைந்து இத்துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

கருணா குழுவைச் சேர்ந்த அந்த ஆயுததாரிகளுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு அளித்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே -வாழைச்சேனை கறுவாக்கேணி பாடசாலை முன்பாக நின்று கொண்டிருந்த இரு இளைஞர்கள் மீது வெள்ளை வான் ஒன்றில் வந்த ஆயுதக் குழுவினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் - கணபதிப்பிள்ளை கோணேஸ்வரன் (வயது 24) மற்றும் குணபால் சுரேஸ் (வயது 24) ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் தமது நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது வானில் வந்த ஆயுதக் குழுவினர் நேற்று காலை 9.45 மணியளவில் இவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை சிவநேசன்

நெட்டிலுப்பாய் - கோண்டாவிலைச் சேர்ந்த ஐயாத்துரை சிவநேசன் அவர்கள் நேற்று (17-04-2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
நெட்டிலுப்பாய், சி.பாஸ்கரன்
கோண்டாவில். (இ) (மகன்)

இப்பத்திரிகை இல.267 [illegible]வலர் வீதி, [illegible]ாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.





பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழகத்தின் ஆவணப்படுத்தல் தொடர்பான ஒலிப்பேழை இறுவட்டு வெளியீடு நேற்றுமுன்தினம் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

நிகழ்வில் - பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், கலைஞர் ஒருவர் கௌரவிக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படங்கள் - தயாளன், தர்ஜனன்

# அரச ஒட்டுப்படைக் குழுவே முஸ்லிம் வர்த்தகரைக் கொன்றது

## மௌலவி ஸகீல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்ந்து வரும் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து அதில் இன்பம் காணத்துடிக்கும் அரசின் ஒட்டுப் படைகளான சதிகாரக் குழுவே யாழ். நகரில் முஸ்லிம் வர்த்தகரை படுகொலை செய்துள்ளதென மௌலவி எஸ்.எம்.சகீல் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நகரில் சுட்டுக்கொல்லப்பட்ட முஸ்லிம் இளைஞரின் படுகொலையை கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் -

யாழ். முனீஸ்வரன் வீதியில் முஸ்லிம் வர்த்தகரான முகமட் ரிஸ்மி என்பவர் படுகொலை செய்யப்பட்டது வன்மையாகக் கண்டிக்கத்தக்க விடயமாகும்.

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறி வரும் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் கொண்டிருக்கும் ஒற்றுமையைச் சீர்குலைத்து அதில் இன்பம் காணத்துடிக்கும் பேரினவாத அரசின் ஒட்டுப் படை சதிகாரக் கும்பலால்தான் இந்தப் ப்டுகொலை செய்யப்பட்டுள்ளதென்பது தெட்டத்தெளிவான உண்மை.

யாழ்.முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து புத்தளம், கொழும்பு போன்ற பல பகுதிகளில் வாழ்ந்து வந்தாலும் - அகதி முகாம்களில் தமக்கான விடியல் எப்போது என்ற ஏக்கத்தில்தான் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய பல எதிர்பார்ப்புக்களைச் சுமந்தே யாழ்.முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் தொழில் செய்கின்றனர்.

தற்பொழுது யாழ்.முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் கொண்டிருக்கும் உறவை சீர்குலைப்பதற்கான நடவடிக்கையாகவே இது உள்ளது. இவ்வாறே கடந்த காலங்களிலும் யாழ். முஸ்லிங்கள் பேரினவாத அரசின் சதிகாரக் கும்பலால் பாதிக்கப்பட்டனர். தற்பொழுது நடந்திருக்கும் நிகழ்வு யாழ்.முஸ்லிம்கள் அனைவரையும் ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது.

இந்த நிகழ்வை யாழ்.முஸ்லிம்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு - எதிர்காலங்களில் இவ்வாறான அசம்பாவிதங்கள் நிகழாவண்ணம் நடவடிக்கை எடுக்குமாறு சகல தரப்பினரையும் வேண்டிக்கொண்டதோடு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இதுதொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓய்வூதிய சுற்றறிக்கை வெளியீடு

புத்தூர் —

01.01.97 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய முரண்பாட்டை அகற்றுதல் எனும் தீர்மானத்தின் கீழ் ஓய்வூதியத் திணைக்கள பணிப்பாளர் கே.ஏ.திலகரத்னவின் கையொப்பத்துடன 2/2006 ஆம் இலக்க சுற்றுநிருபமொன்று கடந்த மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 01.01.97 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்றவர்களுக்கு 01.01.97 ன் திகதியில் இருத்தப்பட்டு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சுற்றுநிருபம் தொடர்பான மேலதிக விபரத்தைப் பார்வையிட விரும்புவோர் நமது ஈழநாடு அலுவலகத்தில் பார்வையிடலாம். (110)

# கடற்தொழில் பரிசோதகரை நியமிக்குமாறு கோரிக்கை!

தாழையடி —

காரைநகர் பிரதேசத்துக்கு தனியானதொரு பிரதேச செயலர் பிரிவு, பிரதேசசபை மற்றும் அரச அலுவலகங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

இதையடுத்து சுழிபுரம் கடற்தொழில் பரிசோதகர் பிரிவுடன் சேர்ந்து இயங்கி வரும் காரைநகர் பிரதேசத்துக்கு தனியானதொரு கடற்தொழில் பரிசோதகரை நியமிக்கும்படி காரைநகர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுக்கவுள்ளது.

யாழ். மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமா சங்களின் சம்மேளனம் ஊடாக திணைக்கள அதிகாரிகளிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாக காரைநகர் கடற்தொழிலாளர் கூட்டுற வுச் சங்க சமாச செயலாளர் க.இராஜச்சந்திரன் தெரிவித்தார். (21)

# மீன் மொத்த விற்பனை நிலையம் காரைநகரில் திறந்துவைப்பு!

தாழையடி —

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் காரைநகர் சாம்பலோடை கடற்கரையில் அம்பாள் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரால் 9 லட்சத்து 53 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மீன் மொத்த விற்பனை நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

அம்பாள் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.இராஜச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இலங்கை உதவித் திட்டப் பணிப்பாளர் சானக்க சமரவீர பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

யாழ்.மாவட்ட திட்ட ஆலோசகர் திருமதி எஸ்.சிவபாதசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வில் - திட்ட அலுவலர் எஸ்.இராசன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர்கள், சங்க அங்கத்தவர்கள், பொதுமக்கள் எனப் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். (21)

# பாரம்பரிய கலைகளை நவீனப்படுத்தி அழியாது பேணி பாதுகாக்கவேண்டும்

## பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு



யாழ்ப்பாணம் —

இளைய தலைமுறையினர் பாரம்பரிய கலைகளுக்கு நவீனத்துவம் கொடுத்து அதனை அழியாது சிறந்த முறையில் வாழ வைக்க வேண்டும் என நேற்றுமுன்தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் இறுவட்டு வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

தொழில்நுட்பம், விஞ்ஞான வளர்ச்சி காரணமாக பாரம்பரிய கலைகள் அழிந்துபோகக்கூடிய சூழ்நிலை உலகில் எல்லா இடங்களிலும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு சூழ்நிலை எமது மண்ணிலும் ஏற்பட்டுள்ளது. எனவே, எமது மண்ணில் புதிய நவீனத்துவத்தை பாரம்பரிய கலைகளுக்கு வழங்கி, மெருகூட்டி இளைய தலைமுறையினர் அவற்றை அழியவிடாது பாதுகாக்கவேண்டும்.

வெளிநாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் பாரம்பரிய கலைகள் ஏனைய கற்கைநெறிகளைப் போல முறைசார் ரீதியாக கற்பிக்கப்பட்டு வருகின்றன. அங்கு அவை பட்டக் கற்கைகளாக இடம்பெறுகின்றன. அதுபோல நாமும் பாரம்பரிய கலைகளை பட்டக் கற்கைநெறிகளாக பல்கலைக்கழக மட்டங்களில் கற்கவேண்டும்.

பாரம்பரிய கலைகளை சிறப்பாக வளர்த்தெடுத்து பாதுகாக்கும் வகையில் அவற்றைப் புதிய பாணியில் வளர்த்தெடுக்கவேண்டும். அந்தவகையில் வீடுகளில் ஓய்வாக இருக்கும் வேளைகளில் பாரம்பரிய கலைகளை கேட்கும் வகையில் பாரம்பரிய கலைகள் இசைத்தட்டுக்களாக இன்று வெளியிடப்படுகின்றன.

இசைத்தட்டு வடிவில் இந்த பாரம்பரிய கலையம்சங்களை வெளியிட முனைந்த கலைஞர்களின் பணி பாராட்டத்தக்கது. அவர்களின் பணி மேலும் வளர்ச்சியுற்று இன்னும் பல புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ரி,த)

# கடற்தொழிலாளர்கள் பிறரில் தங்கியிராது சுயமாக வாழும் நிலையை ஏற்படுத்த வேண்டும்

## உணவு விவசாய நிறுவன பணிப்பாளர்

யாழ்ப்பாணம் —

கடற்தொழிலாளர்கள் மற்றவர்களிடம் தங்கியிராது தமது சொந்தக் கைகளை நம்பி வாழக்கூடிய நிலைமையை எதிர்வரும் காலங்களில் உருவாக்க வேண்டுமென உணவு விவசாய நிறுவனத்தின்வடக்கு, கிழக்கு மாகாணபிராந்திய பணிப்பாளர் கலாநிதி ஸ்ரீவ் கிறீச் தெரிவித்தார்.

அண்மையில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் உணவு விவசாய நிறுவனம் நடத்திய செயல்பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது -

கடற்தொழிலில் ஈடுபடுபவர்களை புனர்வாழ்வு நிலையிலிருந்து அபிவிருத்தி நிலைக்கு மாற்றவேண்டும். சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அரச சார்பற்ற நிறுவ்ன்ங்கள் மாறி, மாறி கடற்தொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்குவதையே வழக்கமாக்கியுள்ளன.

இதன் மூலம் கடற்தொழிலாளர்கள் தொடர்ந்தும் பிறரில் தங்கியிருக்கும் நிலையை உருவாக்கிக் கொள்கின்றனர். ஆனால், அபிவிருத்தி குறித்து எவருமே இதுவரை சிந்திக்கவில்லை. கடற்தொழிலை நாம் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

கடற்தொழிலாளர்களின் நலனுக்கென உருவாக்கப்பட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்பார்த்தபடி இயங்கவில்லை. சங்கங்கள் வலுவடையவில்லை. பலம் பெறவில்லை. சங்கங்களின் பலம் என்ன? பலவீனம் என்ன? வாய்ப்புக்கள் உள்ளனவா? அச்சுறுத்தல்கள் இருக்கின்றனவா? என்பது குறித்த ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகள் என்ன? அடிப்படைத் தேவைகள் என்ன? என்பது குறித்து சரியான கணிப்பீடுகள் செய்யப்பட வேண்டும். இவற்றைச் செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்களில் போதிய ஆளணி வளம் இல்லாமல் இருப்பது தெரியவந்துள்ளது.

எனவே, உணவு விவசாய நிறுவனம் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சங்கங்களின் நிலை குறித்த ஆய்வுகளையும், தகவல் திரட்டும் பணிகளையும் ஆரம்பிக்கவுள்ளது. கடற்தொழிலாளர்களை இனியும் மற்றவர்களிடம் கையேந்தும் நிலையில் வைத்திருக்க அனுமதிக்கக்கூடாது.

இந்த வகையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் கடற்தொழிலாளர்களின் சமூக, பொருளாதார நிலையில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த உணவு விவசாய நிறுவனம் முன்வந்துள்ளது எனத் தெரிவித்தார்.

இணையத் தலைவர் ஏ.கே.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடந்த இந்த செயல் பட்டறையில் - உணவு, விவசாய நிறுவன அதிகாரி எஸ்.செல்வராஜா, கடற்தொழில் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர், கூட்டுறவுத் திணைக்கள பிரதிநிதி, இணையச் செயலாளர் வீ.ஸ்ரீசக்திவேல் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று




பெயர் : டே.ததீசன்
முகவரி : அல்லைப்பிட்டி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
பெற்றோர் ஒப்பம்

# காவல்துறை 1 ஆம் அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு!




கிளிநொச்சி—

தமிழீழ காவல்துறையின் இந்த ஆண்டுக்கான முதலாம் அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

தமிழீழ காவல்துறையின் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு கல்லூரி கண்காணிப்பாளர் தமிழரசன் தலைமை தாங்கினார்.

பொதுச் சுடரை அடம்பன் காவல் பணிமனைப் பொறுப்பாளர் அன்ரன் ஜோசப் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை காவல்துறை நடுவப் பணியகக் கண்காணிப்பாளர் மாதவன் ஏற்றினார்.

அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு மன்னார் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் கண்ணாளன் ஏற்ற, மலர்மாலையை தமிழீழ காவல்துறையின் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் இயலரசன் அணிவித்தார்.

தமிழீழ காவல்துறைக் கொடியை காவல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் கானகன் ஏற்றினார்.

இதைத் தொடர்ந்து பயிற்சியை நிறைவுசெய்த அணியினரின் அணிவகுப்பு நடைபெற்றது. அணிவகுப்பு மரியாதையை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை தமிழீழ காவல்துறையின் ஆய்வாளர்கள் கிருபாகரன், இமாக்கிறேர், விஜயகுமார் மற்றும் துணை ஆய்வாளர் கபிலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் சிறப்புரையாற்றினார். நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

பயிற்சியின்போது நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குகொண்டு அதிக புள்ளிகளைப் பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

# பாரதி வித்தியாலயத்தில் இளையோர் கூடல் நிகழ்வுகள்

இராமநாதபுரம்—

புலிகளின்குரல் நிறுவனம் இளையோர் கூடல் நிகழ்வுகளை பாடசாலை மட்டத்தில் நடத்தி வருகின்றது.

இதன் முதலாவது நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புலிகளின் குரல் நிறுவனத்தின் நிர்வாக இணைப்பாளர் இ.இராஜேஸ்வரன், கலைத்துறை மேலாளர் கபிலன், தமிழீழ வானொலி இணைப்பாளர் திருமாறன், இசை அமைப்பாளர் ஸ்ரீ குகன், வானொலிக் கலைஞர் ஏழிசை, அறிவிப்பாளர் கொற்றவை, தொழில்நுட்பவியலாளர் சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வானொலி நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கவுரைகளும், மாணவர்களுக்கிடையிலான போட்டிகளும் இடம்பெற்றன. (இ)

# அனிஞ்சியன் குளம் தமிழ் கலவன் பாடசாலையில் மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சி நெறி!

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் வலயம் அனிஞ்சியன் குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் தரம் 8,9 வகுப்பு மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை முதலுதவிப் பயிற்சிநெறி நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ரி.கே.ஜோதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - கருத்துரைகளை பொதுச்சுகாதார பரிசோதகர் செ.அரவிந்தன் நிகழ்த்தினார்.

இந்தப் பயிற்சி நெறியானது தமிழீழ சுகாதார சேவையினரின் ஒழுங்குபடுத்தலில் மல்லாவி சுகாதாரசேவைகள் பணிமனையினரால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியில் 100 மாணவர்கள் கலந்து கொண்டனர். (கு)

# யானைகளின் அட்டகாசம்

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம், பாலம்பிட்டி ஆகிய இடங்களில் யானைகளின் தொல்லை அதிகரித்து வருகிறது.

இந்தக் கிராமங்களுக்குள் புகுந்து நெற்பயிர்களை அழிப்பதுடன் மக்களின் குடியிருப்புக்குள் புகுந்து வீடுகளை நாசமாக்கி வருகின்றன. இதனால் மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

# சுமைகளையும், இரகசியங்களையும் பேணிக்காத்தவர்கள் நாட்டுப்பற்றாளர்கள்

## யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி



பளை—

இருள் என்பது வெளிச்சத்துக்கானது. தற்போதைய இருண்ட சூழல் அகன்று விரைவில் ஒளி பிறக்கும் என விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

பளை மத்திய கல்லூரியில் யாழ். மாவட்ட நாட்டுப்பற்றாளர்களை நினைவுகூரும் வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

எங்களுடைய சுதந்திர விடுதலைப் போராட்டத்தில் மாவீரர்களின் வீரம், தியாகம் என்பன ஆவணப்படுத்தப்பட்டு, அவர்கள் அனைவரையும் நினைவுகூரும் நாளாக நவம்பர் 27 அமைந்துள்ளது.

அதேபோன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக நின்று, அதன் சுமைகளையும், இரகசியங்களையும் பேணிப் பாதுகாத்து நின்று உழைத்தவர்கள் நாட்டுப்பற்றாளர்களே. இவர்களை நினைவு கூர்ந்து, கௌரவப்படுத்தி மார்ச் 19 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 19 ஆம் திகதி வரையான நாட்களை எமது அமைப்பு நாட்டுப்பற்றாளர்களைக் கௌரவிக்கும் நாட்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்திய வல்லாதிக்கம் அகலக் கால்பதித்து, எமது போராட்டத்தை சிறுகுழுக்களின் போராட்டம் என நசுக்க நினைத்தபோது, இந்தப் போராட்டம் மக்கள் விடுதலைக்கான போராட்டம் என்பதை தியாகதீபம் அன்னை பூபதி அகிம்சை மூலம் எடுத்துக்காட்டி, வீரச்சாவைத் அணைத்துக் கொண்டார். இந்திய வல்லாதிக்கமும், உலகமும் நன்கு தமிழ் மக்களின் விடுதலை வேட்கையை உணரத் தொடங்கின.

எனவேதான் நாட்டுப்பற்றாளர்கள் குடும்ப வாழ்வோடும், தாயகப் பற்றோடும் உழைத்த உத்தமர்களாக மதிக்கப்படுகின்றனர்.

அறிவுசார் துறைகளிலும், நிபுணத்துவம் சார் துறைகளிலும் நின்று உழைத்தவர்கள். நெருக்குவாரங்களுக்கு மத்தியில் நின்று சாவை அணைத்துக்கொண்டவர்கள் இவர்கள். இதுவரை யாழ். குடாநாட்டில் 193 நாட்டுப் பற்றாளர்கள் தமிழீழ தேசியத் தலைவரால் மதிப்பளிக்கப்பட்டிருக்கின்றனர்.

அந்த வகையில் நாட்டுப்பற்றாளர்களின் எண்ணங்கள் ஈடேறும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

இருட்டு என்பது வெளிச்சத்துக்கானது. எனவே, இப்போதைய இருட்டானது மிகப் பெரிய வெளிச்சத்துக்கானது. இதை உணர்ந்து நாம் எல்லோரும் ஒன்றுபட்டு, அவர்களின் கனவை நினைவாக்குவோம்.

எனவே, இலங்கை தேசம் சர்வதேசத்தின் பார்வையில் ஒரு பயங்கரவாத தேசமாக கணிக்கப்படும்.

தற்போது நடைபெறும் ஒவ்வொரு சம்பவங்களும் எமது தாயகத்துக்கான படிக்கற்களாகவே இருக்கப் போகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# பயணிகள் அசௌகரியம்

கிளிநொச்சி—

மக்கள் அதிகமாகப் பயணம் மேற்கொள்ளும் பகுதிகளில் சிறிய பேரூந்துகள் சேவையில் ஈடுபடுத்துவதன் காரணமாகப் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி டிப்போ வீதியூடாக கோணாவில், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், முழங்காவில் பகுதிகளுக்குப் போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் பேரூந்துக்காக பல மணிநேரம் காத்து நிற்கின்றனர். ஆனால், சிறிய ரக பேரூந்துகள் சேவைக்குட்படுத்தப்பட்டு வரும் வேளைகளில் பேரூந்தில் பயணிக்க முடியாத நிலையில் தமது பயணத்தை மேற்கொள்ள முடியாது திரும்பிச்செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கும் ஆளாக வேண்டி ஏற்படுகின்றது.

இந்த வேளைகளில் ஒருவாறு பேரூந்தில் இடம் கிடைக்கப்பெற்றவர்கள் நிற்கவும் முடியாது திரும்பவோ, அசையவோ முடியாத நிலையில் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டே பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்படியான வீதிப்போக்குவரத்தின் போது பயணிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, பெரிய பேரூந்துகளைச் சேவையில் ஈடுபடுத்திப் பயணிகளின் அவலத்தைப் போக்க சம்பந்தப்பட்டோர் முன்வரவேண்டுமென இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காசீம் சிறுவர் போசாக்கு நிலையத்தில் மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி!

வன்னேரி—

காசீம் சிறுவர் போசாக்கு பகல் பராமரிப்பு நிலையத்தின் மெய்வல்லுர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை தமிழர் புனர்வாழ்வுக்கழக அக்கராயன் பிரதேச உதவிப்பணிப்பாளர் சி.கோ.நல்லையா, ஆனைவிழுந்தான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் நவீனமலர், மாறன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியை ஆனை விழுந்தான் அரசியற்துறை பொறுப்பாளர் குட்டி மணி ஏற்றிவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை சிறுவர் நலன்திட்ட பணிப்பாளர் இராசுஇரவி ஏற்றிவைத்தார். அக்கராயன் அபிவிருத்தி நிறுவனக் கொடியை திட்ட இணைப்பாளர் இ.துசிதரன், முன்பள்ளி மேம்பாட்டுக் கொடியை அக்கராயன் முன்பள்ளி கட்டமைப்புத் தலைவர் ரெ.இலங்கேஸ்வரன் ஏற்றி வைத்தார்.

காசீம் சிறுவர் போசாக்கு பூங்காக் கொடியை நிர்வாகி மகேஸ்வரன் புஸ்பலதா ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை பூங்கா சிறுவன் எ.டினேஸ் காந் நிகழ்த்தினார். ஆசிரியுரையை ஆணைவிழுந்தான் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை அதிபர் ச.நவீனமலர் நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைக்கப்பட்டு, விளையாட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறப்புரையை சிறுவர் நலன் திட்டப்பணிப்பாளர் இராசு இரவி நிகழ்த்தினார்.

தொடர்ந்து பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வின் நன்றியுரையை ஆசிரியர் சங்கத் தலைவர் சு.விக்னேஸ்வரன் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் அரச படைகள் போரைத் திணிக்கின்றன

## வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர்

வவுனியா—

விடுதலைப் புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் அரச படைகள் வேண்டுமென்றே போரைத் திணிப்பதாக வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழர் தாயகத்தில் படையினரும், துணை இராணுவக் குழுவினரும் இணைந்து மேற்கொள்ளும் தாக்குதல்கள் குறித்து ஞானம் கூறியதாவது -

அண்மைய நாட்களாக வவுனியா, மன்னார் மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அத்துமீறி உள்நுழையும் படையினரும், ஆழ ஊடுருவும் படையினரும் இணைந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள படையினர் - மக்கள் மீது நடத்திய தாக்குதல் இன ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு செயற்பாடாகும்.

தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் - படைகளும், துணை இராணுவக் குழுக்களும் தமிழ் மக்கள் மீதான இன ஒழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருகின்றன.

படைகளின் மக்கள் மீதான வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளானது வலிந்த போர்த் திணிப்பு நடவடிக்கையேயென ஞானம் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.